# தமிழ் முரசு

முரசு: 4
ஒலி: 7
வைகாசி
1986

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்




ஒன்று சேருங்கள்!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

## புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

முதலாளித்துவத்திற்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் நிகழ்த்திய உக்கிரமான போராட்ட வெற்றியின் சின்னமாகிய மே தினங்கள் பல வந்த போதும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்கின்றன. தொழிலாளர்கள் தமது இரத்தத்தில் தோய்த்துப் பறக்கவிட்ட செங்கொடிகள் உயரப்பறந்து கொண்டிருக்கின்றபோதும், முதலாளித்துவ முதலைகளால் அவர்களுடைய உதிரம் தொடர்ந்து உறிஞ்சப்பட்டுக் கொண்டே உள்ளது. மொழி, இனம், நிறம், தேசம் என்ற பேதங்களைக் கடந்து தொழிலாள வர்க்கத்தை நசுக்குவதில் தமக்கிடையே ஒரு எழுதாத உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சர்வதேச முதலாளித்துவம் இன்றும் உலகத் தொழிலாள வர்க்கத்தின் மோசமான எதிரியாகக் காத்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்தக் கட்டத்தில் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் ஈழப்போராட்டத்தை முன்னெடுக்க முயலும் ஈழமக்களாகிய நாம் இந்தப் பிரச்சினைகள் எமக்குச் சம்பந்தமற்றவை என இருந்துவிட முடியாது. ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ் ஆளும் முதலாளித்துவத் தலைமை சிங்களத்தில் நடக்கும் தொழிலாளர் போராட்டங்களுக்கும் எமக்கும் எந்த சம்பந்தமுமில்லை நாம் தமிழர்கள் என்று ஈழமக்களை ஏமாற்றி அவர்களது கவனத்தை தமிழ் இனவாதத்தின் மூலம் மறைத்து சிங்கள முதலாளித்துவத்திற்கு அடிபோனது போன்ற துரோகச் செயல்கள் இன்றும் தொடர்வதை புரட்சிகர சக்திகள் அனுமதிக்க முடியாது. பெரும்பான்மையான நடுத்தரவர்க்க மக்களைக் கொண்ட எமது இனத்தின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மற்றவரின் பிரச்சினை எதுவும் எமக்கு வேண்டாம். எம்மை நாம் பார்த்துக் கொண்டால் போதும்' என்ற மன உணர்வைப் பயன்படுத்தி அன்று 'அண்ணன்' வார்த்தை ஜாலங்களாலும் இன்று 'தம்பி' அதுபுது ஜாலங்களாலும் பாட்டாளிவர்க்க சக்திகள் திசைதிருப்பப்பட்டு உண்மையான மக்கள் போராட்டம் இன்று விரக்தி நிலைக்கு தடைபோட்டு எம்மவர்களின் கண்களைக் கட்டிப்போட்டுத் தொடர்ந்து அவர்களின் இடையே வைத்திருக்க முயல்வதை அனுமதிக்க முடியாது.

சிங்கள பேரினவாத ஒடுக்குமுறை அரசின் சதிகளும், தமிழ் ஒடுக்குமுறையாளர்களின் இலக்குகளும் ஒரே நோக்கிலிருந்து ஒன்றிணைந்தும் இந்த பிற்போக்கு தந்திரத்திற்கு நாம் பலியாகிவிடக் கூடாது. இன்று சிங்களவரின் ஒவ்வொரு மேலதிகமும் ஒடுக்கப்படும் சிங்கள பாட்டாளிமக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். அதற்கேற்றதான அவர்களது போராட்டங்களுக்குப் பக்கபலமாக வேண்டும். புரட்சிகர போராட்ட நிலைக்கு அவர்களையும் இட்டுச் செல்ல வேண்டும். எமது பொது எதிரியைப் பலவீனப் படுத்த அந்த போர்முனையில் சிங்களவரையும் திரட்ட வேண்டும்.

அதே சமயம் ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க உருவாகிவரும் பாட்டாளிவர்க்கத் தலைமையை சிதறச் செய்வதற்காக தமிழ் ஒடுக்குமுறையாளர்கள் புரிந்துவரும் சதிகளை குறிப்பாக இயக்கங்களுக்கிடையில் மோதல் படுகொலைகளை வளர்க்கும் வகையில், இயக்கங்களுக்கிடையே நடத்தும் உட்போராட்டங்களைப் புரிந்துகொண்டு அவற்றை இனங்காண வேண்டும். போராளிகளை ஒன்று திரட்டிக்கொண்டு, ஈழத்தின் போராளிகள் வீட்டுக்கு சென்றுக்கு காவல் நிற்பவர்கள் 36 வேலை இருந்த நிறுத்தப்பட்டதும் ஈழத் தேசத்தின் விடுதலைப் போராட்டம், ஈழப் பாட்டாளிகளின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும் என்பதிலும் வர்க்கப் போராட்டத்துடன் இணைந்தே ஈழத்தேசிய விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதிலும் நாம் மீண்டுமொருமுறை மனதில் பதித்து எமது புரட்சிகர விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தொழிலாளர்களே

# ஒடுக்கப்பட்ட தேச மக்களே

# ஒன்று சேருங்கள்!...

உலகத்தொழிலாள வர்க்கத்தினதும், உலகின் ஒடுக்கப்படும் மக்களுடனான ஐக்கியமும் அவற்றின் வழியே நாம் பெறுகின்ற உதவிகளுமில்லாமல் ஈழப் புரட்சியை வென்றெடுக்க முடியாது என்பது யதார்த்த உண்மையே. உலக வரலாற்றில் பல்வேறு இனங்களுக்கு மத்தியில் தமது விடுதலைப்போராட்டங்களை வெற்றிபெற்ற பின்னும் பஞ்சம் தொடக்கம் வேறு பல துறைகளுக்கு முதலாளித்துவ, ஏகாதிபத்தியங்களின் திட்டமிட்டசதிகளால் உள்ளாக்கப்பட்டார்கள். இந்த வரலாற்று உண்மை உதாரணங்களிலிருந்து ஈழ மக்களும் தப்பிவிட முடியாது. என்பதை இன்று ஈழத்தில் நடக்கும் எதிரியின் அடக்குமுறைகளும் அதனால் ஈழமக்கள் தினமும் அனுபவிக்கும் அத்தனை துயரங்களும் காட்டிக் கொண்டிருக்கின்றன. நீளமானதும் கடினமானதுமான ஈழப் போராட்டத்தில் இதை விடக்கடுமையான துன்பங்களையும் துயரங்களையும் எம்மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே இன்று எம்மக்கள் எதிர்நோக்குகின்ற இன்னல்களையும் ஓர் அளவிற்கு நிவர்த்தி செய்யவேண்டியும் மக்களுக்குப் போராடும் திறனை மேலும்மேலும் கொடுப்பதற்காக வேண்டியும் மக்களின் நோக்குகளை விரிவடையச்செய்து முற்போக்குச்சிந்தனைகளை நோக்கி அவர்களை நகர்த்துவதற்காகவும் சர்வதேச விடுதலையியக்கங்களை ஆதரித்து அவற்றுடன் ஈழவிடுதலை இயக்கங்கள் ஐக்கியப்படவேண்டியது மிகுந்த அவசியமாகிறது.

ஏகாதிபத்தியங்களால்ஒடுக்கப்படும் மக்களுக்குச் சார்பாக நாமும் குரல்கொடுத்து அவர்களின் போராட்டங்களுக்கு நாமும் துணை நிற்றல்வேண்டும். என்பதை அனைத்து ஈழ விடுதலை இயக்கங்களும் புரிந்துகொள்ளல் வேண்டும். இவர்களின் உறவால் ஆயுதங்கள், யுத்தப்பயிற்சிகள், உணவு, உடை, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வது மாத்திரமல்ல உலக அரங்கில் எமது எதிரிக்கு எதிரான குரலை ஓங்கி ஒலிக்கவும் முடியும். எனவேதான் உலகின் எந்த மூலையில் யார் யார் ஒடுக்கப்பட்டாலும் அவர்களுக்காகக் குரல்கொடுக்க எமது இயக்கங்கள் முன்வர வேண்டும். ஏனெனில் உலகப் பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் தான் ஆக்கிரமிப்பு எதிரிக்கு எதிரான எமது போரில் எம்மைப் பாதுகாக்கப்போவது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் பதிக்கவேண்டும். சர்வ தேச ஏகாதிபத்தியங்களால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கம், எல்சல்வடோரில் FMLN நிக்கரகுவாவில் FSLN பிலிப்பைன்சில் NPA, அங்கோலாவில் MPLA, தென்னுபிரிக்காவில் ANC இவை மாத்திரமல்ல உலகின் ஒவ்வொரு மூலையிலும்போராட்டங்களை முன்னெடுத்துவரும் இவைபோன்று பல்வேறு இயக்கங்களும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வருகிறுர்கள். இவைபோன்ற இயக்கங்களுடனை எமது ஐக்கியமே ஈழவிடுதலைக்கான திறவுகோலாக இருக்கும். ஈழப்போராட்டத்தை நசுக்குவதற்காக ஜெயவர்த்தனு அரசுக்கு அவனது முதலாளித்துவ எசமானர்களால் வழங்கப்படும் ஆயுதங்களின் அளவு உலகளாவிய பல்வேறுபட்ட இவ்வியக்கங்களின் போராட்டங்களினுல் குறைக்கப்படுகிறது. இது இவ்வியக்கங்கள் இன்று ஈழப்போராட்டத்திற்குச் செய்துவரும் மறைமுகமான பெரும் உதவியாகும்.

இது மாத்திரமல்ல உலகின் முழு முதலாளித்துவமும் சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட்டு உலகப்பாட்டாளிவர்க்கத்தை ஒடுக்கிவருவதை நாம் காண்கிறேம். நம் கண்முன்னுலேயே ஜெயவர்த்தனுவின் முதலாளித்துவ அரசு தூக்கியெறிந்து விடப்படக்கூடாது. முதலாளித்துவம் இலங்கையில் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தமது ஆசையை நிறைவேற்ற இலங்கையில் ஒரு சிவப்புப் புரட்சியை கொண்டுவர வல்ல ஈழப்புரட்சியை நசுக்கிவிடவேண்டும் என்ற அவாவில் ஜெயவர்த்தனுவின் ஆட்சியைப் பாதுகாக்க அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் மாத்திரமல்ல தென்னுபிரிக்காவிலிருந்து தென்கொரியாவரையிலான முதலாளித்துவங்களும் கூட ஐக்கியப்பட்டு ஆயுதங்களை வழங்குவதைக் காண்கின்றேம். இவர்கள் இந்த ஆயுதங்களை சிங்கள மக்கள் மீது உள்ள அன்பினுல் வழங்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அன்றுடம் ஒரு நேர உணவுக்கே பரிதவிக்கின்ற சிங்களப்பாட்டாளி மக்களுக்கு ஒரு நேர உணவைக்கூட வழங்க மறுக்கின்ற இந்தநாடுகள் தோன்றவிருக்கும் புரட்சியை கருவிலேயே சிதைப்பதற்காகவும் முதலாளித்துவத்தினை இன்னும் பல்லாண்டுகாலம் வாழவைப்பதற்காகவுமே தம் சகபாடி ஜெயவர்த்தனுவிற்கு ஆயுதங்களை வழங்கி அவனது அடக்குமுறை அரசைப் பாதுகாக்க முயல்கிறுர்கள் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இத்தகையதொரு சூழ்நிலையில் நாம் தனித்து நின்று போராடுவது எமது அழிவுக்குத்தான் வழி வகுக்கும்.

இவற்றை ஆராய்ந்து தான் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எமது சர்வதேசநிலைப்பாட்டை வகுத்துக்கொண்டிருக்கின்றேம். எமது தேசிய விடுதலைப்போராட்டமானது உலகின் சமாதானம், ஜனநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய விடுதலை, சமூகமுன்னேற்றம் ஆகியவற்றிற்காக நடைபெறுகின்ற போராட்டங்களின் ஒரு பகுதியே என்பதை வலியுறுத்துவதுடன் இன்று உலக சோசலிச அமைப்புக்கும், முதலாளித்துவ அமைப்புக்கும் இடையே போராட்டம் நடைபெற்றுவருவதை எமது மக்களுக்கு விளக்கி வருகிறோம்.

புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகளைத் தொடர்ந்தும் தொடர்ந்தும் தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கு ஏகாதிபத்தியம் முயற்சித்து வருகிறது. புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகள் தமது சுதந்திரத்தைப் பேணுவதற்கும், தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் தேசிய ஒருமைப்பாட்டைவலுப்படுத்துவதற்கும் சோசலிச நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே தேசிய விடுதலைப் போராட்டம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்பவற்றுக்கெதிரான போராட்டமாகும். மாறிவரும் இன்றைய காலகட்டத்தில் சோசலிச நாடுகளுக்கும் தேசிய விடுதலைப்போராட்டங்களுக்கும் இடையே உள்ள உறவு பிரிக்கப்பட முடியாததாகும்.

காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாடுகளை நவகாலனித்துவ உறவுகளின் மூலம் ஏகாதிபத்தியம் தொடர்ந்தும் தனது பிடிக்குள் வைத்திருக்கிறது. இந்நாடுகளை உலக முதலாளித்துவஅமைப்பு உலக சோசலிச அமைப்புக்கு எதிராகத் தனது போராட்டத்தின் உலகளாவிய தனது அரசியல் பொருளாதார இராணுவ நலனுக்காகப் பயன்படுத்த முயற்சி செய்து வருகிறது. முதலாளித்துவ முகாமிலிருந்து தம்மை விடுவித்துச் சோசலிச முகாமுடன் இணைந்து கொள்வதன் மூலமே இந்நாடுகள் உண்மையான அரசியல் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்ய முடியும். அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுல் தலைமை தாங்கப்படும் சர்வதேசப் பிற்போக்குச் சக்திகளும் இந்திய உபகண்டத்தில் தமது உலகளாவிய நலன்களைப் பேணுவதற்கான கருவியாக ஸ்ரீலங்காவின் பிற்போக்காட்சி அதிகாரத்தைப் பலப்படுத்தி வருகின்றன.

எமது தேசிய விடுதலைப்போராட்டத்தினூடாக ஸ்ரீலங்கா ஆட்சி அதிகாரத்தைப் பலவீனப்படுத்தல் மூலம் இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்திய சதியை முறியடிப்பதோடு ஸ்ரீலங்காவின் பாட்டாளி வர்க்க புரட்சி ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளையும் உருவாக்க முடியும். இவை எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் இவற்றின் அடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியினராகிய நாம் எமது சர்வதேசியக் கடமைகளை வரையறுத்துக்கொண்டிருக்கின்றோம். அவையாவன:------ ஸ்ரீலங்காவைப்பொறுத்த வரையில்,

1. ஈழவிடுதலையை ஆதரிக்கும் சிங்கள முற்போக்குச் சக்திகளுடன் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஈழ விடுதலைப் போராட்டத்தினைப் பற்றிச் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதுடன் இவ்வேலையினைச்செய்யும் முற்போக்கு அமைப்புகளுக்கு செயலூக்கமான ஆதரவளித்தல்.

3. ஸ்ரீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசுக்கு எதிராகவும் அதற்கு உறுதுணையாக நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கெதிராகப்போராடும் சகல சிங்கள முற்போக்குச் சக்திகளுக்கும் ஆதரவளித்தல்.

4. ஜனநாயக உரிமைகளுக்காக ஸ்ரீலங்கா மக்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்தல்.

ஏனைய தேசங்களைப்பொறுத்தவரையில்,

1. உலகெங்கும் உள்ள தேசிய விடுதலை இயக்கங்களோடு ஐக்கியமான பிணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்.

2. உலகெங்குமுள்ள பாட்டாளிவர்க்கக் கட்சிகளோடும் முற்போக்கு ஜனநாயக சக்திகளோடும் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளல்.

3. சோசலிச சக்திகளுக்கு உறுதுணையாக நின்று அவற்றோடு நெருங்கிய நட்பை வளர்த்துக்கொள்ளல்.

4. அணிசேரா இயக்கத்தின் கொள்கைகளுக்கு ஆதரவளித்தல்.

5. இந்து சமுத்திரப்பிராந்தியத்தை சமாதான மண்டலமாக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக நிற்றல்.

6. நிறவெறி, இனவெறி மதவெறி, சியோனிசம், பாசிசம், ஆகியவற்றிற்கெதிராகப் போராடுதல்.

7. சோசலிச நாடுகளிற்கெதிரான யுத்த அச்சுறுத்தல்களுக்கெதிராகவும் போராடும் சக்திகளுடன் இணைந்து செயற்படல்.

8. உலக சமாதான இயக்கத்திற்கு ஆதரவளித்தல்.

இந்தச் சர்வதேசக் கடமைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே இறுதி வெற்றியினை வென்றெடுக்க முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உலகத் தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள் என்ற கோஷத்தை முன்வைத்து அதற்காக உழைத்து வருகிறது.

தோழர்களே! ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தரும் ஈழச் செய்திகளை தொலைபேசி மூலம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 48-74-60-43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லாமற் போகும்

## புதல்வர்கள்

மார்கழி மாதத்தின் முன் இரவில் ஓர்நாள் —
அவன்
நேரமாகியும் வீடு திரும்பவில்லை.
வழமையாக கோயில் மணி ஒன்பதடிக்க
வாசலில் அவன் வருவது தெரியும்.
எழுந்து சென்று
கதவைத் திறந்து
அவனை அழைத்து
உணவு போடவும் அப்போதும்
அவன் மௌனம்தான்.
எப்பொழுதும் அவன் அப்படித்தான்
சாப்பிடும்போது எதுவும் பேசான்.
என் மகன் —
நள்ளிரவாகியும் வரவேயில்லை.
எங்கே போனான்?

அன்று
தங்கை அயர்ந்து தூங்கியிருந்தாள்
நானும் அவனைத் தேடி இருந்தேன்,
அதன் பின் அவன் வரவேயில்லை
நீ எங்குபோனாய் என்பதை அறியேன்.

ஆனால், இன்று
அறிந்தேன் வேறொரு கதை
உனது நண்பன் சொன்னான்,
மீசை அரும்பும் இந்த வயதில்
நாட்டுப்பற்று வந்ததா உனக்கு!
அப்படியானால்
கடமைகள் இருக்கும்
வீரனாய் இருந்து வீடு திரும்பு.

ஔவை

நன்றி: மரணத்துள் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறிலங்கா செய்திகள்

## 'புலிகளின் தாகம் போராளிகளின் இரத்தம்'
## - ஈழத்தில் விடுதலைப் புலிகளின் வெறியாட்டம் தொடர்கிறது.

சக இயக்கப் போராளிகளைக் கொன்று குவிப்பதில் 'பிரபல்யம்' வாய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை வெறியாட்டம் இம்முறை தமிழ் ஈழ விடுதலை இயக்கப் போராளிகளுக்கெதிராக மிகக் கொடூரமான முறையில் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. சிறீலங்காவின் பாசிச அரசாங்க பயங்கரவாத இயந்திரம் போலும் துரோகச் செயல்களை தொடர்ந்து செய்து வரும் விடுதலைப் புலிகள், சிறீலங்கா இராணுவத்தைப்போல TELO முகாம்களைச் சுற்றிவளைத்து 50க்கும் மேற்பட்ட TELO போராளிகளைச் சுட்டுக்கொன்றுள்ளதாகவும் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களையும் கொன்றுள்ளதாகவும் TELO வின் அறிக்கை தெரிவிக்கிறது. அத்தோடு TELO இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தைக் கொல்வதற்காக புலிகள் வெறிகொண்டலைவதாகவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகள் நடாத்தும் இவ்வெறியாட்டங்களைப் பயன்படுத்திய சிறீலங்கா இராணுவம் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. விடுதலைக்கு மடியாத போராளிகளின் உயிர்களை வெறித்தனமாகக் கொன்றழித்து போராட்டத்தின் தன்மையையும் முறியடிக்கக்கூடாது என்ற பொறுமை எண்ணத்துடன் நடந்து, மற்றுமொரு காலனித்துவ சக்திகளுக்கு விலைபோய் விட்ட புலிகள் [illegible]களுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிபியா மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிராக ஈழ மக்கள் ஆர்ப்பாட்டம்.

லிபியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்து யாழ் நகரிலும் மற்றும் ஈழத்தின் பல பகுதிகளிலும் ஹர்த்தால், எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்தினர். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோசங்களுடன் இடம்பெற்ற இவ்வூர்வலங்களில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை விட்டதுடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போரில் லிபிய மக்களுடன் ஈழ மக்கள் தோளோடு தோள் நின்று போராடுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈழ மக்கள் இனி காடுகளிலும் கூட வாழ முடியாது.

சிறீலங்கா இராணுவத்தின் மனிதவேட்டைக்குத் தப்பி ஈழ மக்கள் காடுகளில் ஒளிந்து வாழ்ந்து வந்தது தெரிந்ததே. இப்போது ஆக்கிரமிப்பாளர்கள் அதற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். வவுனியா மாவட்டத்தில் உள்ள காடுகள் அனைத்தும் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன் இக்காடுகளில் வசித்தல், நடமாடுதல், பிரயாணம் செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் இத்தடையை மீறுவோர் சுட்டுக்கொல்லப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம் என நவபாசிச அரசு அறிவித்துள்ளது.

## ஐ.தே.க. ஆட்சியின் அவலங்கள்.

ஐ.தே.கட்சி பதவிக்கு வந்த பின்னர் இலங்கையில் 176 இந்து ஆலயங்கள் அரச கூலிப்படையினரால் நாசம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ்ப்பகுதிகளில் பாரிய கலாச்சார அழிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானிய - அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் பலாலியில் விமானப்படைத் தளம்.

ஈழ மண்ணில் தனது இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்தவும், தனது ஏகாதிபத்திய எஜமானர்களைத் திருப்திப்படுத்தவும் சிறிலங்கா நவபாசிச அரசு, பிரித்தானிய - அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் துணையுடன் பலாலியில் ஒரு சர்வதேச விமானப்படைத் தளம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னோடியாக இப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த ஈழ மக்கள் கூலிப்படைகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## தாதிகள் போராட்டத்துடன் தமிழர் கரமும் இணையட்டும்.

சிறிலங்காவில் நடந்து வரும் தாதிமார் போராட்டத்தை வலுப்படுத்த தமிழ் மக்களது கரங்களும் இணைய வேண்டும் எனக் கோரும் அறிக்கையொன்றை தேசிய மாணவர் மன்றம் விடுத்துள்ளது. இவ்வறிக்கையில் இதுவரை காலமும் தமிழ் மக்களை அடக்குவதற்கு பிரயோகிக்கப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் இப்போது தாதிமார் சங்கத்தை அடக்க முனைந்ததும் அதுபோலவே இன்று தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நீட்டப்பட்டுள்ள துப்பாக்கிகளை நாளை அரசு சிங்கள மக்களுக்கு எதிராக நீட்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் சகல உழைக்கும் மக்களும் அரசின் சூழ்ச்சிகளைப் புரிந்து இனவாத உணர்வுகளைப் புறம்பே தள்ளி பரஸ்பரம் மக்கள் பிரிவுகளுக்கு எதிரான உணர்வுகளை உடைத்தெறிந்து அரசுக்கு எதிரான போராட்டத்தில் இணைவதற்கான ஒரு படியாக தாதிமார் போராட்டம் அமையட்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் சிங்கள மக்களின் போராட்டங்கள் தமிழ் பேசும் மக்களின் தேச விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டுவதாகவே அமையும். சிங்கள மக்களிடையே எவ்வளவுக்கெவ்வளவு அரசு அம்பலப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தமிழ் பேசும் மக்களது போராட்டத்தின் நியாயத்தன்மை சிங்கள மக்களால் உணரப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கை இனப்பிரச்சினையின் இந்திய மத்தியஸ்தம் படுதோல்வி - 'இந்து' கருத்து.

இலங்கையின் உண்மை நிலையை விட்டு திரு. ரொமேஷ் பண்டாரி உதாசீனமாக இருந்துவிட்டாரெனவும் இது தான் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா மேற்கொண்ட மத்தியஸ்தம் படுதோல்வியடைய காரணமாக கொண்டுள்ளது எனவும், இலங்கைப் பிரச்சினை இந்திய ராஜதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள சவால் எனவும் 'இந்து' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

## சிறிலங்கா - இஸ்ரேல் - பாகிஸ்தான் வகுத்துள்ள புதிய கொரில்லாக் கூட்டு.

சிறிலங்காவில் இராணுவ புரிந்துவரும் இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை, புலனாய்வு அதிகாரிகள் சிலர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளனர். இஸ்ரேல், மொசாட் அமைப்பினைச் சேர்ந்த இவர்களின் இவ்விஜயம் சிறிலங்காவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அதிகரித்துவரும் இராணுவத் தொடர்புகளின் முக்கிய அம்சம் எனவும் செய்திகள் தெரிவித்துள்ளன. அதேசமயம் சிறிலங்காவின் நாசகார வேலையைத் தொடர்ந்து பலஸ்தீனிய மக்களைக் கொன்றழித்துவரும் இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பாகிஸ்தான் அரபு நாடுகளுக்கு விடுத்துள்ளது. அத்தோடு இது குறித்து இந்திய லோகசபையில் பேசிய ராஜீவ் காந்தி 'பாகிஸ்தானும், இஸ்ரேலும், தோளோடு தோள் சேர்ந்து இலங்கையில் செயல்படுகின்றன. இது ஒரு சாதாரணமான சங்கதியல்ல எனக் குறிப்பிட்டதுடன் இலங்கையில் காணப்படும் பல்வேறு நவீனப் பாதுகாப்பு வசதிகள் குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## சிறிலங்கா சீனாவிடம் கோரிய இராணுவ உதவி நிராகரிப்பு!

இலங்கையின் ஈழப் போராளிகளைச் சமாளிக்க இராணுவ உதவி வழங்குமாறு சிறிலங்கா அரசு விடுத்த வேண்டுகோளை சீனா நிராகரித்துள்ளதாக இந்திய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில் யாழ்.குடாநாட்டில் பெரும் அரச பயங்கரவாதம்! கட்டியம் கூறுகிறான் ஜே.ஆர்.

யாழ். குடா நாட்டில் விரைவில் தனது கூலிப்படைகளை நிறுத்தப்போகும் அரசபயங்கரவாத நடவடிக்கை ஒன்றுக்கான ஆரம்பக் கட்டியத்தை ஜெயவர்த்தன இப்போதே கூற ஆரம்பித்துவிட்டான். லண்டன் 'ரைம்ஸ்'க்கு அவன் அளித்த பேட்டியொன்றில் யாழ். குடாநாட்டில் தனது இராணுவமும், பொலிசும் இருந்து வரும் அப்பிரதேசம் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாகக் கூறிய அவன் அங்கு என்ன நடக்கிறது என்று தனக்குத் தெரியாதென்றும் யாழ்ப்பாணத்தை மீண்டும் தம்வசம் எடுத்துக் கொள்வதென்பது அப்பாவிகளைக் கொன்று குவிப்பதே என்றும் கூறியுள்ளான்.

## ஆக்கிரமிப்பாளரின் அக்கிரமங்கள் எல்லை கடக்கின்றன.

சிறீலங்காவின் கூலிப்படைகள் யாழ் தேசத்தில் தொடர்ந்தும் இனஅழிப்பு வேலைகளை எல்லை கடந்து செய்கின்றன. 2.4.86 அன்று காங்கேசன்துறைத் தளத்திலிருந்து பல கிராமங்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்தும் கடல் பிராந்தியத்திலிருந்தும் 4 மணித்தியாலங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தப்பட்டன. இத்தாக்குதல் சம்பவங்களால் பீதியடைந்து பாதுகாப்பான இடத்தை நாடி ஓடிய மக்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து இரசாயனத் திராவகம் வீசப்பட்டதால் பலர் பாதிக்கப்பட்டனர். இத்தாக்குதல்களின் போது க.இராசரத்தினம் (45வயது) கொல்லப்பட்டதுடன், 15க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்து பலர் படுகாயமும் அடைந்தனர். இதுபோல 1.4.86 பருத்தித்துறையில் நிகழ்த்தப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களில் இருவர் பலியாகினர். இதேசமயம் 6.4.86 அன்று அதிகாலை முதல் 10 மணிநேரம் யாழ். கோட்டையிலிருந்து நடந்த 'ஷெல்' தாக்குதல்களில் இருவர் பலியானதுடன் 5பெண்கள் உட்பட 12பேர் படுகாயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் சிறு வடிவில்.....

- தாதிமாரின் போராட்டத்திற்கு ஆதரவாக உண்ணா விரதமிருந்த 5பௌத்த பிக்குகள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

- தலவாக்கொல்லை அக்கரப்பத்தனை தோட்டத் தொழிலாளி ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதற்கு எதிராக 3000க்கு மேலான தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

- சுவிற்சலாந்தில் அரசியல் புகலிடம் கோரி அங்கு தங்கமடைந்திருக்கும் இலங்கைத் தமிழர்கள் உடனடியாக திருப்பியனுப்பப்பட மாட்டார்கள் என இந்தியாவுக்கு விஜயம் செய்த சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

- இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கை நோக்கிவந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிக் குடும்பங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

- இலங்கைக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்துமாறு கோரியும், இந்து சமுத்திரத்திலிருந்து அமெரிக்க யுத்தக்கப்பல்களை வாபஸ்பெற வேண்டும் எனக்கோரியும் இந்திரா இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு சென்று பெரும் ஆர்ப்பாட்டமொன்றைச் செய்துள்ளனர்.

- இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம் என்று உலகநாடுகள் அனைத்துக்கும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

- காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலியை உள்ளடக்கிய பாரிய செப்பனிடத்தக்க இராணுவ தளத்தினை, சாதனங்கள் சகிதம் அமைக்க சிறிலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் திட்டம் தீட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்திரையன் செய்யும் இருட்டடிப்பு நாகரிகமற்ற ஒரு அரசியல் பார்வை

புதுடெல்கிப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருக்கும் சாலை இளந்திரையனை ஈழ மக்கள் நன்கு அறிவர். இவர் அடிக்கடி ஈழமக்களைப் பற்றிப் பேசுவார். ஈழமக்களிடையே இவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆனால், இந்த நல்ல அபிப்பிராயத்தை இவரால் தொடர்ந்தும் காப்பாற்றிக்கொள்ள முடியுமா என்பதில் ஒரு சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது. இந்தச் சந்தேகத்தை, வீரவேங்கை-யில் இவர் எழுதி இருக்கும் கட்டுரை ஒன்று வலுப்படுத்துகின்றது.

இலக்கிய விமர்சனங்களைச் செய்யும்போது ஒரு நடுவுநிலையைக் கட்டிக்காக்கும் சாலை இளந்திரையன், அரசியல் மதிப்பீடுசெய்யும்போது ஒரு சரிவு நிலைக்குள் தாழ்ந்து போய் விட்டார். காலஞ்சென்ற அரசியல்வாதியான எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 88ஆவது பிறந்ததினத்தின் நினைவாக அவர் 'வீரவேங்கை' யில் எழுதியிருக்கும் கட்டுரையை மீள்பார்வை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

எமது போராட்டத்திலே இரண்டு கோசம் உண்டு. ஒன்று ஈழம். மற்றது தமிழீழம். இன்றைய சூழலில் இதனை ஒரு பெரிய பிரச்சினையாக அலசாது விட்டாலும், இது ஒரு சின்னப் பிரச்சனை அல்ல என்பதே உண்மையாகும். இந்தப்பதங்கள் தொடர்பான சரியான புரிந்துணர்வு அரசியல் ஆய்வாளர்களுக்கும், விமர்சகர்களிற்கும் மிகமிக அவசியம். ஈழமா, தமிழீழமா என்ற குழப்பத்தை சாலை இளந்திரையன் தன்னுடைய கட்டுரைக்குள் சாரமாரியாகத் தூவியிருக்கிறார். அத்தோடு ஈழப்போராட்டத்தின் மிகமிகக் குறுகலான ஒரு பக்கத்துக்கு மட்டுமே அவர் வக்காலத்து வாங்கியிருக்கின்றார். ஈழப்போரின் வளர்ச்சி நிலைகள் அனைத்திற்கும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை ஒரு முழு வாரிசாகக் காட்டும் தன்மை கட்டுரையெங்கும் தென்படுகிறது. குறிப்பாக, ஈழ அரசியலில் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பங்கினை அரசியல் நாகரிகத்தின்படி அலசி ஆராயத் தவறிவிட்டார் இளந்திரையன். செல்வநாயகத்தின் அரசியலே இன்று ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்தது என்று காட்டப்படும் கருத்தினை ஏற்கமுடியாது. ஆயுதப் போராட்டமாக ஈழப்போராட்டம் பரிணமிக்கும் என்ற பிரக்ஞை அற்ற ஒரு அரசியலே செல்வநாயகத்தாலும் அவரது குழுக்களாலும் கட்டி வளர்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் கருதி அவர்கள் ஆயுதப்போராட்டங்கள் தொடர்பாகப் பேசியவைகளை ஒரு "தேர்தல்காலத்தந்திரமாகக்" கருத முடியுமே தவிர ஒரு திட்டமிட்ட நேர்மையான அரசியல் சாணக்கியமாகக் கருதமுடியாது என்பதை இங்கு அவதானிக்க வேண்டும்.

"இன்று தமிழீழ விடுதலைப்போரை விடுதலைப்புலிகள் முன் நின்று நடத்துகின்றார்கள்."

இப்படி ஓர் இடத்தில் எழுதுகின்றார் சாலை இளந்திரையன். இது எதைக் குறிக்கின்றது? ஒட்டுமொத்தமாக ஈழவிடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஏனைய இயக்கங்களை இருட்டடிப்புச் செய்து ஒரேயொரு இயக்கத்தை மட்டுமே வெளியே கொண்டு வருகின்றார். இது ஒரு பிற்போக்கு விமர்சக அணுகு முறை.

ஈழப்போராட்டம் இன்று பலவித வளர்ச்சிக் கட்டங்களைக் கண்டுள்ளது. இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம் ஈழவேங்கையில் எழுதுவதாயின் ஈழவேங்கையை எதிர்க்காமல் மட்டுமல்ல, ஆதரித்தும் எழுதவேண்டும் என்ற ஒரு நெருக்குவாரம் உள்ளது போலும் என்பதனை இளந்திரையன் எமக்கு உணர்த்துகின்றார்.

மொத்தத்தில் பார்க்கும் போது அரசியல் விமர்சன நாகரிகத்தினைமறுக்கும் – துதிபாடு தன்மைகளை ஆதரிக்கும் அம்சங்களை கட்டுரையில் காண முடிகின்றது.

சாலை இளந்திரையன் போன்றவர்கள் தங்கள் பேனாக்களின் தராதரங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அதாவது, பேனாக்களை – வீரசாகசங்களை ஏற்றிப் புகழ்வதற்கும் தனிநபர் துதிபாடுவதற்கும் குத்தகைக்கு விடக்கூடாது. – சயந்தர்

* * *

தோழர்களே,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுப் பிரிவு, மற்றும் ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் ஆகியவற்றுடன் அனைத்து தொடர்புகட்கும்...

EPIC
10, RUE DES MARTYRS
75009-PARIS.
தொலைபேசி: 48-74-98-30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம் தொலைந்த காலம்

சந்தோசப் புயலாகும்
சித்திரை தலைச்சோளகம்
சோளகத்தின் தழுவலிலே
தலையாட்டும் பனை, தென்னை
பனை, தென்னை நிழல்களிலே
நாலு நிறப் பூச் சொரியும்
நாயுண்ணிப் பூக்காடு......

வானம் தொடும் மாயமாய்
நீலமாய் தாங்கும் கடல் கூட
அலை அசைந்து நுரை எழும்பும்
வசந்த காலம் இப்போ.
எங்கள் பூமியிலே,

பூமியும் அழகுதான் வானமும்
வண்ணம் தான்......
எங்கள் மக்களோ?...
வசந்தம் தொலைத்த காலமாய்
காலைகள் விடிவது சாவுக்காய்
மாலைகள் என்பது மரணத்துக்காய்
அவியாத நெருப்புக்குள்
அந்தரித்து வாழ்கின்றார்

இருப்பிலும் மரண இருளிலும்
இருப்பவர் மீள்வது எப்போ?
சிலுவைகள் தாங்கி
முள் முடி தரித்து செத்திடும் வாழ்வு
உயிர்த்திடும் நாள் எப்போ?

—செல்வம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள்

சிறுகதை

சூர்யன்

"எப்படியாவது இண்டைக்கு பத்துப் புத்தகமாவது விற்றுவிட வேண்டும். அதோடு யாரையும் சந்தித்து கொஞ்சக் காசும் சேர்க்க வேண்டும். அப்பதான் இயக்கத்தின் திட்டத்துக்குஇம்மாத முடிவில் கொஞ்சக் காசு அனுப்பலாம்"-என்று மனம் நினைக்க கைரிக்கற் புத்தகம் யக்கற் பொக்கற்றுக்குள் இருக்குதா என்று சரி பார்த்துக் கொண்டது. "நேரம் போற வேகத்தைப் பார். அதுக்குள்ளை 6½ மணியாச்சு. இந்த மெற்ரோவையும் இன்னும் காணவில்லையே. எப்பிடியெண்டாலும் கொஞ்சப் புத்தகத்தை விற்று பத்து மணிக்காவது றூமுக்குப் போனால்த் தான் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு 12 மணிக்காவது படுக்கலாம். அடுத்த நாள் காலை 5 மணிக்கு எழும்ப வேண்டும். அதன் பின்னர் முதல் மெற்ரோ பிடித்துஊசியாய்த் துளைக்கும் குளிரில் துடித்துத் தூவண்டு உடலில் பேப்பர் மூட்டைகளை அடித்து நீண்ட தூரம் நடந்து..."-அதை நினைக்க சுந்தரின் உடல் ஒரு தடவை துடித்துத் துகள்கிறது. அவனின் சிந்தனைக்குத் தடை போடுகிற மாதிரி மெற்ரோ வந்து நிற்கிறது. முண்டி அடித்துக் கொண்டு மெற்ரோவினுள் ஏறிய அவனால் இருப்பதற்கு இடம் பிடிக்க முடியவில்லை. அதாவது பரவாயில்லை. மெற்ரோவுக்குள் இருந்த பல பிரெஞ்சுக்காரர்கள் அவனை ஒரு வேண்டத்தகாத பார்வையுடன் நோக்கியதைத் தான் அவனால் தாங்க முடியவில்லை. "சில வருடங்களுக்கு முன்னால் இவர்களது பாரவையில் தான் எவ்வளவு அன்பு இருந்தது... கனிவிருந்தது. இன்று எங்களில் ஒரு சிலர் செய்த .. செய்து விடுகின்ற தவறான வேலைகள் எப்படி ஒரு நாட்டு மக்களின் வெறுப்பை எம் இனத்துக்கு சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றது."-அவனது மனம் குமுறியது. அரச கொடுமைகளைக் காரணமாகக் கூறிப் புகலிடம் கோரி வந்துவிட்டு, அடைக்கலமும் ஆதரவும் தரும் மக்களின் எதிர்காலச் சந்ததியைபோதையிலே மிதக்கச் செய்து புதைகுழிக்கு அனுப்பும் செயல்கட்குத் துணை போகும் சுய நலமிகளை நினைத்துத் சுந்தர் கோபத்தால் துடித்தான். அதற்குள் அவன் இறங்கவேண்டிய மெற்ரோ நிலையம் வந்து விட்டதால் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு மெய்ரோவிலிருந்து இறங்கி நிலையத்தை விட்டு வெளியே வந்தான்.

அந்த இடத்தில் ஒரு தமிழ்க் கடை இருப்பதால் அப்பகுதியில் பெருமளவு எமது மக்களின் நடமாட்டம் இருப்பது அவனுக்குத் தெரியும். அதுவும் வெள்ளிக்கிழமை மாலை நேரம் என்றால் வீடியோக் கசட்டுகளை வாடகைக்கு எடுக்கவும் இதர பொருட்களை வாங்கவும் அப்பகுதியில் கூட்டம் அலை மோதுமென்று அவனுக்குத் தெரியும். அதனால்த் தான் அங்கு வருபவர்களிடத்தில் கொஞ்சப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களை விற்கலாம் என்று அவன் வந்திருக்கிறன்.

கடைக்குப் போகும் வீதியை நோக்கி சுந்தர் நடக்கையி லே கடையிலிருந்து வந்த மூன்று தமிழ் இளைஞர்கள் சுந்தரையும் அவன் கையில் புத்தகங்கள் இருப்பதையும் கண்டுவிட்டு வீதியின் மறு பக்கம் விரைந்து நடப்பதைச் சுந்தர் பார்த்துவிட்டு வேதனையு டன் தனக்குள் சிரித்துக்கொண்டான். அந்தச் சமயம் அவன் அரு கில் இருவர் வர அவர்களிடம் அவன் புத்தகத்தை நீட்டஅவர்களில் ஒருவர்-"இந்தப் புத்தகம் நாங்கள் ஏற்கெனவே வாங்கிவிட்டம்" என்கிருர். அதற்குச் சுந்தர்-"இல்லை அண்ணை இது இன்றுதான் வந்த புத்தகம்" என்று சொல்ல அவரோ-"என்ன தம்பி, சொன்னுல்நம்ப மாட்டன் என்கிறீர்- நான் என்ன பொய்யா சொல்றன். வாங்கி விட்டம் என்முல் கேட்கமாட்டன் என்கிறீரே!"-என்று சொல்லி விட்டு சுந்தரின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வேகமாக நடக்கிருர் கள். இவர்கள் எப்படி இப் புத்தகத்தை வாங்கி இருக்கமுடியும்? நேற்று இந்தியாவில் இருந்து வந்த புத்தகத்தை இன்று காலை கொப்பி அடித்து அவனும் அவனது தோழர்களும் வேலை முடிந்து இயக்க அலுவலகம் வந்து அங்கே புத்தகங்களைக் கட்டி இப்பதா னே வெளிக்கிட்டிருக்கிருர்கள். அதற்குள் எப்படி இவர்கள் இப்புத் தகத்தை வாங்கி இருப்பார்கள்... மனம் சிரித்துக்கொண்டது.

கடைக்குப் போகும் வழியில் உள்ள சந்தியில் சில தமிழ் இளைஞர் கள் கதைத்துக் கொண்டு நிற்பதைக் கண்ட சுந்தர் அவர்களிடம் சில புத்தகத்தை விற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் அவர்களை நெ ருங்குகின்ருன் அவனுடைய தலையைக் கண்டவுடனேயே கதைத்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவன்-"டேய்?. டேய்!! இயக்கக்காரன் வாறானடா. கையில் புத்தகக் கட்டும் இருக்கு, அதைப்புத் தரப் போருன் மாறுங்கடா!" என்று சொன்னது சுந்தரின் காதில் தெளி வாகவே விழுந்தது. சுவாரஸ்யமாகக் கதைத்துக் கொண்டிருந்தவர் கள் இயக்கப் புத்தகத்தை வாங்க வேண்டுமே என்ற அச்சத்தில் கால் போன போக்கில் விரைந்ததைப் பார்த்து சுந்தரின் மனம் மீண்டும் சோகத்துடன் சிரித்துக் கொண்டது. 'எதுக்கும் இதிலே முன்னால் உள்ள கட்டிடத்தில் 2 பேர் மில் தமிழ் ஆட்கள் இருக்கினம் ஒருக்கால் முயற்சி செய்து பார்ப்போம்'-என்ற நினைவுடன் அந்த கட்டிடத்தில் பிரவேசித்து ஆரும் மாடியில் உள்ள முதலாவது ரூம் ரூமுக்குப் படிகளால் ஏறினன். கொன்சியஸ் எனப்படும் வீட்டின் காவல்ப் பெண்மணிக்குப் பயந்து மெதுமெதுவாய் படிகளில் காலடி ஏறி வைத்துக்களைத்துப் போய் ஆரும் மாடியை அடைந்து கதவை தட்டிய சுந்தர் கதவு திறந்தபோது கொஞ்சம் சந்தோசப்பட் டான். ஏனென்முல் இது போலப் பலதடவை தட்டியும் திறக்காத கதவுகளைக் கண்டு பரிச்சயப்பட்டவன். கதவைத் திறந்த இளைஞ னிடம் சுந்தர்-"வணக்கம் இயக்க வெளியீடாகிய புத்தகம் கொண்டு வந்திருக்கின்றேன் எடுக்கிறீர்களா?"-கதவைத் திறந்த இளைஞனிடம் புத்தகத்தை வாங்கும் ஆர்வமும் சுந்தருடன் கதைக்கும் ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஆனால் அதையும் மீறி அவன் கண்களில் ஓர் அச்சம். அந்த சத்திற்கான காரணம் அறையின் உள்ளே இருந்து ஒரு தடித்த குரலாக வெளிவந்தது. "சும்மா மாறி மாறி ஆயிரம் பேர் இயக்கம் இயக்கம் என்று வருவான்கள், எல்லோருக்கும் காசு குடுத்தும், புத்தகம் வாங்கியும் கொண்டிருந்தால் நானைக்கு நாங்கள் உடுக்கின்றதுக்குத் துணியும் இல்லாமல் மெற்றேவில் தான் படுக்க வேண்டியிருக்கும்"-அந்தச் சொற்களைக் கேட்டவுடன் கதவைத் திறந்த இளைஞன் வெட்கத்துடன் தலை குனிந்தான் ஆனால் சுந்தருக்கு இது பல இடங்களில் கேட்டுப் பழகிப்போன சொற்கள் தானே.

"நான் அவருடன் கதைக்கலாமா?"-என்று சுந்தர் அந்த இளைஞனைக் கேட்க அவனும் விருப்பமின்றிச் சம்மதிக்க சுந்தர் அறைக்குள் பிரவேசித்தான்,

றெலிவிசன் தன் பாட்டில் ஓடிக்கொண்டிருக்கக் கட்டிலில் சரிந்திருந்து வைன் குடித்துக்கொண்டிருந்த ஒருவரே அந்தச்சொற்களைச் சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டான் சுந்தர். அறையில் சமையல் பகுதியாகப் பிரிக்கப்பட்ட பகுதியில் மேலும் இரு இளைஞர்கள் தீவிரமாகச் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். சுந்தர் கட்டிலில் இருந்தவருக்கு வணக்கம் கூறினான். அவரோ-

"தம்பி நாங்கள் கஷ்டப்பட்டுழைக்கிறம், இப்பிடி இயக்கம் இயக்கம் என்று நீங்கள் மாறிமாறி வந்து எங்களை உறிஞ்சிக்கொண்டு இருந்தால் நாங்கள் வாழுறேல்லையா? ஊரிலை இருக்கிற எங்கடை அக்கா தங்கச்சியைக் கரை சேர்க்கிறதில்லையா? எங்கடை அண்ணை தம்பியைக் கூப்பிடேல்லையா? எங்கடை வாழ்க்கையைப் பார்க்கிறேல்லையா? இப்படியே காலம் முழுவதும் கூட்டிக்கொண்டும் கழுவிக்கொண்டும் புறாக்கூடு மாதிரி அறைக்குள்ளே அடைஞ்சு கிடக்கின்றதா?"-என்று ஏதோ சுந்தர் ஆயிரக்கணக்கான பிராங்குகளைக் கேட்டமாதிரிக் கதைத்தார். அவரது இந்தக் கதையைக் கேட்டு சுந்தர் கோபப்படவில்லை. ஏனெனில் அவனும் ஒரு காலத்தில் இவர் போலத்தானே இருந்தவன். நடுத்தர வர்க்க இளைஞர்களின் மன உணர்வுகள் இப்படித்தானே இருக்கும் என்பது அவனுக்குத் தெரியாதா?

பிரச்சனை இல்லாத வேலை கை நிறையச் சம்பளம் வெளிநாட்டு வாழ்க்கையின் உல்லாசங்கள் என்றெல்லாம் இருந்த சுந்தர் தாய் நாட்டைப் பற்றிச் சிந்தித்த நேரங்கள் எல்லாம் முன்னர் வெகுவாகக் குறைவு. கிட்டத் தட்ட இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் இலங்கையில் இருந்து அவனது தாய் அவனுக்கு அவசர அவசரமாக எழுதிய கடிதத்தில் சுந்தரின் தம்பி இப்போதெல்லாம் அடிக்கடி வீட்டிலிருந்து காணமல்ப் போய்விடுவதாகவும் ஏதோ இயக்கத்தில சேர்ந்துவிட்டதாகவும் பயிற்சி எடுத்து வருவதாகவும் அது அவனுக்கும் ஆபத்து குடும்பத்துக்கும் ஆபத்து என்று அவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக பிரான்சுக்குக் கூப்பிடும்படியும் அவனுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து அவனது கவனத்தை இயக்கத்திலிருந்து திசை திருப்பும்படியும் இருந்தது. 5வருடகாலமாக ஐரோப்பிய வாழ்க்கையில் ஊறிக்கொண்டிருந்த சுந்தருக்கு தான் பிரான்சுக்கு வெளிக்கிடும் போது அரைக்காற் சட்டையுடன் நின்றிருந்த தம்பி சேகர் 'அண்ணை எனக்கு இவ்வளவு சாமானும் வாங்கி அனுப்பு'-என்று பட்டியல் போட்டுக்கொடுத்த அந்தத் தம்பி சேகர் இன்று இயக்கம். பயிற்சி.. இவற்றைச் சுந்தரால் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியவில்லை.

இவற்றையெல்லாம் விட்டுவிடுமாறும், பிரான்சுக்கு வெளிக்கிடுவதற்குத் தயாராகுமாறும் உனக்கு என்ன பொருட்கள் வேண்டுமென்றும் கேட்டும் தம்பிக்கு ஒரு கடிதம் எழுதினான் சுந்தர். அதற்குச் சேகரிடமிருந்து வந்த பதில்... "அண்ணை குடியை விடச் சொல்லி எழுதலாம் கூடாத பழக்கங்களை விடச்சொல்லி எழுதலாம் தவறில்லை. ஆனல், நாட்டுக்காகப் போராடும் தீரத்தையும் தியாகத்தையும் விட்டுவிடச்சொல்லி எழுதி இருக்கிறீர்கள் இது சரியா? நாட்டை விட்டுப் புறப்படத்தயாராகும்படி எழுதியிருக்கிறீர்கள் மன்னிக்கவும். உங்கள் விருப்பத்திற்கு நான் உடன்படாமல் இருப்பதற்கு எதிரிப் படைகள் எங்கள் மண்ணிலே கால் ஊன்றி எங்கள் மக்களைக் கொல்வதை எங்கள் மண்ணில் வெறி ஆட்டம் நடத்துவதை இந்த இரு கண்களாலும் பார்த்தபின்னர் கூட எதிர்த்துப் போராடாமல் கோழையாக வெளிநாட்டுக்குத் தப்பிவந்துவிட என் மனம் விரும்பவில்லை. மேலும் எனக்கு என்ன வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள் அண்ணை எனக்கு என்று இப்போ தனிப்பட்ட தேவைகள் எதுவுமே இல்லை, என்னுடைய தேவைகள் நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் தேவைகளே. எனது நாட்டின் தேவைகளே. இங்கே எங்கள் தோழர்கள் நிறையக் கஷ்டப்படுகிறார்கள். ஆயுதங்களுக்காக மாத்திரமல்ல அடுத்தவேளை உணவுக்காக, உடைக்காக. எனவே அண்ணை எனக்கு நீங்கள் அனுப்ப விரும்புவதனைக் கீழே குறிக்கப்பட்டிருக்கும் இயக்க முகவரிக்கு அனுப்பவும். அது மாத்திரமல்ல மாதா மாதம் உங்கள் சம்பளத்தில் ஒரு கணிசமான தொகையை எமது இயக்கத்துக்கு அனுப்பவும். அது மாத்திரமல்ல நீங்களும் கட்டாயம் எங்களுடைய இயக்கத்தினது அல்லது உங்கள் கருத்துக்குச் சரியாகப்பட்ட இயக்கத்தினது பிரான்சுப்பிரிவோடு இணைந்து இயக்க வேலைகளைச் செய்யுங்கள். அண்ணை நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள் எனது நடவடிக்கைகளால் எமது குடும்பத்துக்கு ஆபத்து என்றும் சகோதரிகளின் எதிர்காலம் சிதைந்துவிடும் என்றும். 5 ஆண்டுகளுக்குமுன்னல் வேண்டுமானல் உங்கள் இந்தக் கூற்று சில வேளை சரியாய் இருக்கலாம். ஆனல் இன்று ஈழத்தில் எல்லாக் குடும்பங்களுமே ஆபத்தில்த்தான் இருக்கின்றன. அடுத்த நிமிட வாழ்க்கையையே வேள்விக்குறியாக்கிவிட்ட இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலில் எதிர்காலக் கனவுகள் யாருக்கிருக்கின்றன.? நாம் மனிதர்களாக மீண்டும் வாழ்வதற்கு எங்கள் தேசம் எங்களிடம் வர வேண்டும். காலம் காலமாய் எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைக்கப்பட வேண்டும். அதற்காகத் தான் இந்தப் போராட்டம். இதிலே போராட்டத்திற்கான பங்களிப்பை ஈழத்தின் பிரசைகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரிவரச் செலுத்தினால் விரைவில் நாம் விடுதலை பெற்று விடலாம்........"
என எழுதிய அந்தக் கடிதத்தை சுந்தர் பல தடவைகள் வாசித்தது தம் பல இரவுகள் சுந்தரின் காதுகளில் அந்தக் கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தைகளும் சேகரின் குரலாய் ஒலித்ததும் அதன் பின்னர் தன்னை உணர்ந்துகொண்டு இயக்கத்தில் இணைந்து பலருடைய கேலிகள் கிண்டல்களுக்கு மத்தியிலும் உடல் களைத்தும் மனத்திருப்தி உடன் தன்னால் இயன்ற இயக்க வேலைகளைச் செய்து வருவதும் தொடர்கின்றது.

சுய நினைவுக்கு வந்த சுந்தர் தடித்த குரலில் கதைத்துக் கொண்டிருந்தவர் அப்போது இருந்த நிலையில் அவருடன்வார்த்தை வளர்க்க விரும்பாமல் அங்கிருந்த இளைஞர்களிடம் விடைபெற்றுக் கொண்டு படிகளில் இறங்கும்போது நினைத்துக்கொண்டான்.
"எனக்கு வந்த ஒரு தம்பியின் கடிதம் என்னில் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் முன்னர் நானிருந்த நிலையில் இன்னும் இருக்கும் பல ஆயிரம் பேரின் சிந்தனையில் மாற்றத்தைக்கொண்டுவர என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியை தனக்குள்ளே எழுப்பிக் கொண்டே இறங்கினான். புத்தகக் கட்டு இன்னும் கைகளில்தான் இருந்தது கடையை அவன் அடைந்தபோது கடையில் அலைமோதும் கூட்டம் அன்று, வெள்ளிக்கிழமை, வீடியோக் கசட்டுக்களை வாடகைக்கு விடும் பகுதியில் காலை வைக்கவே இடமில்லை. "அந்தப்படமில்லையா, அண்ணை இந்தப்படமில்லையா அண்ணை" என்று அலைபாயும் குரல்கள். அந்தக் குரல்களையும் மீறி"எவ்வளவு சரியில்லை அண்ணை! நான் போனகிழமை வந்து இந்தக் கிழமையும் மூன்டு தரம் வந்தனான். 'பேசும் படம்' புத்தகம் ஒன்டு எனக்கு எடுத்து வைக்கச் சொல்லி இப்ப முடிஞ்சுது என்டு சொல்லுறீங்களே" - என்று ஒரு குரல். "என்ன அண்ணை மூன்டு ஒருதம் தந்திருக்கிறீங்கள். இடையில் ஒன்டு இல்லை. எப்பிடியாவது அதைத் தாங்கோ. அது இல்லாமல் தொடர்கதை என்னண்டு வாசிக்கிறது." இது மறு குரல்..... குரல்களுக்குச் சொந்தக் காரர்களின் முகங்களைப் பார்க்கிறான் சுந்தர். இயக்கப் புத்தகம் வாங்கத் தட்டிக் கழித்தவர்களும், சுந்தரின் தலையைக் கண்டு மாறியவர்களும் தான். மனம் கசந்து கொண்டது. அங்கே ஈழத்தில் தாம் சாப்பிடுகின்ற ஒருநேரச் சாப்பாட்டைக்கூட சாப்பிடாமல் அந்தக்காசில் பத்திரிகை, புத்தகம் அடித்து அஃப்பும் இயக்கப்போராளிகளையும் இவர்களையும் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது. தினந்தோறும் ஜீவமரணப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராட்டமாய்த் தொடரும் எம் மக்களின் கதைகளை கருத்திலே பதிக்காத மசாலச் சஞ்சிகைகளையும் கண்ட சினிமாக்களையும் தேடி மாநுடத்தை மறக்கும் எமது இளைஞர்களைப் பற்றி சுந்தர் யோசிக்கிறன். கடையிலிருந்து வெளியே வந்து மெற்றேவை நோக்கி நடக்கிறன். புத்தகக் கட்டு அப்படியே இருக்கின்றது. சுமைகள் அவன் கைகளில் மாத்திரமல்ல அவன் மனத்திலும்தான்.

## முகம் மறுக்கப்பட்டவர்கள்

இவர்கள்
நகரின் யந்திரமயத்தில்
முகமிழந்த மனிதரல்ல.

வீதியில் சென்ற
வீட்டினில் இருந்த
சுருங்கக் கூறின்
இம்மண்ணில் பிறந்த
சாதனைக்காகச்
சன்னங்களால்
பரிசளிக்கப் பட்டவர்கள்.
அத்துடன்,
தீச் சுவாலை போர்த்திக்
கௌரவிக்கப் பட்டவர்கள்:
இதனுல் —
முகம் மறைக்கப்பட்டவர்கள்!

ஆஸ்பத்திரிச் சவச்சாலையில்
அடையாளம் காணப்படாதவர்கள்.
உற்றுரால்......
பெற்ற தாயாரால்
அடையாளம் கண்ட பின்னும்
காட்டிக் கொள்ளப் படாதவர்கள்.
இதனுல் இவர்கள்
முகமிருந்தும்
மறுக்கப் பட்டவர்கள்.

மைத்ரேயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள்

தென்னாபிரிக்கக் கவிதை

எனது குழந்தைப் பருவத்தில்
ஒரு சின்ன இளம் வெள்ளையன்
ஒரு வாகனத்தில் இருந்ததை
நான் பார்த்தேன்.
எதற்காக நான்,
நடந்து செல்ல வேண்டுமென்பதும்
அவன் அண்மையிலும்,
நான் தொலைவிலும்
எதற்காக வாழ வேண்டுமென்பதும்
எனக்கு எப்போதுமே விளங்கவில்லை.

அழகாகவும் வெறிச்சோடியும் கிடந்த
ஒரு பெரிய கட்டிடத்தை
நான், எனது
குழந்தைப் பருவத்திலே பார்த்தேன்
எதற்காக எங்கள் வீடு சிறியதாகவும்
அது பெரியதாகவும்
ஏன் இருந்தது என்பது
எனக்கு ஒரு போதுமே விளங்கியதில்லை.
எதற்காக நாங்கள்,
மிகவும் குறுகலான இடத்தில்
வாழ வேண்டும்?

எனது குழந்தைப் பருவத்திலே
நான் ஒரு
தார் வீதியைப் பார்த்தேன்
அது சுத்தமாகவும்,
வெறிச்சோடியும் இருந்தது.
எதற்காக எங்கள் வீதி ஜீவிதத்துடனும்,
ஏனைய வீதிகள் வெறுமையாகவும் இருந்தது
என்பது எனக்கு ஒருபோதுமே விளங்கவில்லை
எதற்காக எங்கள் வீதி
அப்படியே தனித்து விடப்பட்டிருக்கின்றது?

— ஷின்ஷி மண்டலோ -

நன்றி: L'HUMANITÉ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகளை அகற்றுவோம்

களையகற்றி நாற்று நட்டு பயிர் வளர்ப்பான் உழவன். களையைப்பொறுத்தவரை பொதுவாக உழவனுக்கு ஓர் பொது எதிரியே. 'களை' எனப்படுவது நாம் விரும்பி நட்ட பயிரை விட வேறு ஏதாவது இடையில் முளைக்குமானால் அது எமக்குக் களையே. ஆனால் களையை நாம் இது தான் எனச் சுட்டிக்காட்ட முடியாது. ஏனெனில் நாம் நெற்பயிரை விரும்பி நடும் போது அங்கு புல் செடி முளைத்தால் அதைக் களை என்கிறோம். அது போல் நாம் அழகிற்காகப் பூச்செடிகளை வளர்க்கும் போது அங்கு நெல் முளைத்தால் அதையும் களை என்கிறோம், அல்லவா

ஆகவே "களை" எனப்படும் எமது பொது எதிரியை நாம் எவ்வாறு இனம் கண்டு அகற்ற முற்படுகின்றோமோ அதே போல் எமது இனத்திற்குள்ளேயே உருவாகி நாம் விரும்பி நட்ட பயிரை தெரிந்தோ தெரியாமலோ அழிக்க முற்படும் களையாகிய சமூக விரோதிகளை இனங் கண்டு முதலில் அகற்ற வேண்டும். இது எமது இன்றைய கடமையாகும்.

முதலாளித்துவத்திற்குச் சார்பான ஒரு இனம்புரியாத புதிய களைகள் எமது பூமியில் இப்பொழுது முளைக்கத்தொடங்கிவிட்டன நாம் இட்ட எமது வித்தாகிய ஈழத்தை நசுக்க நாம் இடும் உணவுகளை உண்டு எம் பயிரையே அழிக்க மேற்படி சக்திகள் தோன்றியுள்ளன. அதற்கான காரணம் என்ன? அக்களைகளை வித்திட்டவர்கள் யார்? ஏதோ தமக்கு நியாயமான காரணத்தை காட்டியே எமது ஈழத்தில் அவர்கள் தங்களது அடாவடித்தனங்களையும் தாம் நினைத்த காரியங்களைச் செய்யும் திறமைபடைத்த சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளைக்காரராகவும் காணப்படுகின்றனர்.

ஈழமக்களைப் பொறுத்தவரையில் இருதலைக்கொள்ளி எறும்பாக ஒரு நிரந்தரமற்ற நிச்சயமற்ற பகல் இரவு அற்றவாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றனர். இயக்கங்களால் முன்வைக்கப்பட்டு கொண்டு நடத்தப்படும் ஈழம், தமிழ்மம் என்பவற்றிற்கு தம்மால் இயன்ற ஆதரவுகளைக் கொடுத்து விடுதலை விரும்பிகளுக்கும் போராளிகளுக்கும் உண்ண உறங்க இடமளித்த அவர்களினது இன்றைய நிலை கவலைக்கிடமாயுள்ளது. வளர்த்த கடா மார்பில் பாய்வது போல சில ஈழ மக்களின் செயல்களால் எமது மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைகள், புல்லாகவும் பூடாகவும் செடியாகவும் ஏன்? மலராகவும் பலதரப்பட்ட வடிவங்களில் தோன்றுகின்றன. அது எவ்வாறு எம்மைப்பொறுத்தவரை எமது விளைவுகளை அல்லது விளைவுக்கான காலங்களைச் சுருக்குகின்றதோ அதுபோலவே விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் முன்னணி இயக்கங்களின் வெற்றியை அல்லது வெற்றிக்கான காயங்களை சுருக்கவல்லைய சில தான்தோன்றித் தனமான குழுக்கள் தோன்றியுள்ளன அவை எமக்கு சிலவேளை நறுமணம் வீசுகின்ற பார்ப்பதற்கு அழகான மலராகவும் இருக்கலாம். ஆனால் மக்களாகிய நாம் அதைக் கண்டு ஏமாறக்கூடாது.

இன்றைய நேரத்தில் ஈழ மக்களைப் பொறுத்தவரை களைகளை இனங்கண்டுகொள்ளவேண்டிய கட்டத்தில் உள்ளனர். அது மட்டுமல்லாது களைகளை அழிக்கும் சிறந்த களை நாசினிகளாகத் தம்மைத் தாம் உருவாக்கவேண்டியவர்களாகவும் காணப்படுகின்றனர். மாறாக முழுமையாக இயக்கங்களை நம்பக்கூடாது. அதாவது இயக்கங்களிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைக்கக்கூடாது நாங்களாக எப்பொழுதும் களையை இனங்கண்டு எம்மை எப்பொழுது களை நாசினியாக மாற்றுகின்றோமோ அப்பொழுதே நாம் வெற்றியை அடையப்போகும் மக்களாக மாறுவோம்.

உண்மையில் இப்படியான நிலையை நாம் எப்பொழுது அடைந்தோம்,எமக்குள் எவ்வித வேற்றுமைகளும் இல்லாது ஒரே நோக்கில் எதிரியை அழிக்கும் மக்களாக மாறுகின்றோமோ அப்பொழுதே வெற்றி கிடைக்கும். எமக்குள்ளேயே வேறுபாடுகளை, மனக்கசப்புகளை, பதவி ஆசைகளை வைத்துக்கொள்வோமானால் அது எமது எதிரிக்கே அனுகூலமாக அமையும். ஏன் இன்று எம்மைச் சமாதானம் பேச்சுவார்த்தை என பாசாங்கு காட்டி எமக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தும் நிலையில் ஸ்ரீலங்கா உள்ளது.

ஒரு போராட்டம் வலுப்பெறும் போது இப்படியான முதலாளித்துவ சக்திகள் உருவாகுவது வழமையே. அது முதலாளித்துவத்தின் தனித்துவமான செயல். பாதிக்கப்படும் மக்களாகிய நாம் இனம் கண்டு அவற்றை அழிக்க வேண்டியது எமது கடமையாகும், தலைவிதியும் கூட.

எனவே இழப்புகள் பத்திலிருந்து ஆயிரத்தைக் கடந்துவிட்டஇந் நேரத்தில் விடுதலைக்காகத் தங்கள் உயிர்களை, இனவெறிபிடித்த ஸ்ரீலங்கா இராணுவத்தாலும் எமக்குள்ளேயே நண்பன் போல் நடிக்கும் கொள்கையற்ற விசமத்தனமுள்ள சில தோழர்களாலும் இழந்த எம் தோழர்களுக்கு எவ்வித களங்கத்தையும் ஏற்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாது நாம் எமது பொது எதிரியை நோக்கி துப்பாக்கிகளை உயர்த்துவோம்.

ஸ்ரீலங்காவானது தன்னை முழு அளவிலும் தயாராக்கி விட்டது. இந்த நேரத்திலும் எமக்கிடையே இனம் புரியாத பேதங்கள் வாக்குவாதங்கள் ஏற்பட்டு எம் போராட்டத்தைப் பின்னடையச் செய்கின்றன. அதுமட்டுமல்லாது எமக்காகக் குரல் தந்த எம் சகோதர நாடுகளின் செல்வாக்கையும் இழக்கவேண்டிய கட்டத்தில் நாம் உள்ளதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

ஆகவே இப்படியான நிலைமைகள் உருவாகுவதற்கு வழிவகுத்தவர்களை நாம் இனங்கண்டு அவர்களை அழிக்க வேண்டும். அல்லது அகற்றவேண்டுமாயில் எம்மையே நாம் களைநாசினியாக மாற்ற வேண்டும். கதவைத் தட்டி விரட்டும் களைகளைச் சந்தி சிரிக்கவைத்து அவர்களின் பிழையை அவர்களே உணர வைக்க வேண்டும்.

- சத்தியன்

## புதை குழிக்கு அனுப்பிடவே

பாழ் நிலத்தை
வாழ் நிலமாக்கியவர்கள்—நாங்கள்
காடுகள் வெட்டி
தோட்டங்கள் சமைத்தவர்கள்—நாங்கள்

இரவும் பகலும்
உணவின்றி உழைத்து
உங்கள் வர்க்கத்தை
வளர்ந்தவர்கள்—நாங்கள்

ஆண்டாண்டு காலமாக
உங்கள் வர்க்கத்தை
வாழவைத்து மாண்டு
மடிகின்ற வர்க்கம்—நாங்கள்

கீழ் வானில் கதிரவன்
எழும் முன்னே
தோள்மீது பாரம் சுமந்து
உங்கள் தோள்களை நிமிர்த்தியவர்கள்—
நாங்கள்

நீங்கள் காலாறி உண்பதற்கும்
களிப்பாக வாழ்வதற்கும்
காலமெல்லாம் எமதுழைப்பே
காரணமாய் அமைந்ததனால்,

தொடர்ந்து வந்த இழிநிலையை
அறியாத எம் தாய் தந்தை
மாடுபோல் உழைத்துழைத்து
மாண்டு போனார்கள்.

தேடினோம் உண்மையினை
தெரிந்து கொண்டோம்.

வறுமை எனும் விலங்கிட்டு
அறியாமை இருளூட்டி
ஆளுகின்ற எமதெதிரி
நீங்களென்று.

புறப்பட்டோம்! விடிவை நோக்கி,
புரட்சி எனும் ஆயுதத்தால்
உம்மை புதை குழிக்கு அனுப்பிடவே...

★

நன்றி: ஏரிமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவை மகேசனும் வீரவேங்கையும் இனவெறியை ஊட்டும் எழுத்துக்கள்

ஈழத்தில், "சுதந்திரன்" பத்திரிகையிலே ஆசிரியராக இருந்த போது தமிழ் பேசும் மக்களிடையே இனவாதத்தை இலக்கியச் சுவையும், நயமும் கலந்து கட்டி வளர்த்தவரான கோவை மகேசன் தனது கை வரிசையை மீண்டும் காட்டத் தொடங்கி இருக்கின்றார். சிறீலங்கா அரசின் சிறையிலிருந்து இந்தியாவிற்குத்தப்பிவந்த அவர், அங்கிருந்துகொண்டே, 'தமிழ்ப்பெரும் வீரம்' கொடிகட்டும் தனது இனத்துவேசப்பணியைத் தொடக்கியிருக்கிறார். அதாவது 'வீரவேங்கை' என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடக்கி, அதன் மூலம் கோவை மகேசன் தனது குறுகிய கண்ணோட்ட எழுத்துக்களை ஈழமக்களிடையே பரப்பத் தொடங்கியிருக்கிறார்.

"வீரவேங்கை" - இது "சுதந்திரன்" எடுத்த மறுபிறவி. முழுக்க முழுக்கத் தனிநபர் துதிபாடுவதற்கும், தமிழ் பேசும் மக்களின் அறிவைச் சூனியமாக்கவும், ஈழமெங்கும் முளைவிட்டிருக்கும் பரந்துபட்ட மனிதநேய உணர்வை அழிப்பதற்கும், ஈழவிடுதலையில் ஈடுபட்டுள்ள முற்போக்கு இயக்கங்களின் வளர்ச்சியை உலகத் தமிழர்களிற்கு இருட்டடிப்புச் செய்யவும், தமிழ் இனவெறிக்கு ஒரு புதிய உற்சாகத்தைக் கொடுக்கவும் எனத் தொடங்கப்பட்ட பத்திரிகை ஆகும். பண்பியல் ரீதியான வளர்ச்சி இலக்கினை விட்டுவிலகி, விபரீதக் கோலங்களைக்கீறிக்கொண்டிருக்கும் 'வீரவேங்கை'யைப் பற்றிச் சிவப்பு விளக்குக் காட்டவேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமாயுள்ளது. இந்தப் பத்திரிகை படுபிற்போக்கான அம்சங்கள் பலவற்றைக்கொண்டுள்ளது. இதில் புதுமையோ, உண்மையோ துளியூட இல்லை. இனவெறியைத்தூண்டும் வகையில் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. குறிப்பாக, எமது கலாச்சாரத்துக்கு கரியைப்பூசும், அரச ஏகாதிபத்தியக் கால இலக்கியங்களில் இருந்து உதாரணங்களை எடுத்து அவற்றினூடாக மக்களை உணர்ச்சிவசப்படுத்தி, அவர்களது தெளிவான சிந்தனைகளைக்குழப்பவே ஈழவேங்கை முற்படுகின்றது.

உதாரணமாகக் கோவை மகேசன், ஈழவேங்கை பங்குனி 1986 இதழில் எழுதியுள்ள சில கவிதை வரிகளைப் பார்ப்போம்.

"காலமோ நள்ளிரவு! களத்திருந்து சிலர் மீண்டார்!
கண்ணன் ஏன் வரவில்லை? தாயுள்ளம் துடிக்கிறது!
கண்ணயரும் நேரத்தில் வந்ததோர் செய்தி!
எதிரியின் வேலுக்குப் புறங்காட்டி உன் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினன் களத்தை விட்டு
முதுகிலே ஈட்டி எந்திப்
பிணமானுன் களத்திலே எனும் சேதி கேட்டு,
சினந்தெழுந்தாள் தமிழ்ச்சி!
என்மகவோ கோழையென்றீர், இல்லை, இல்லை
என்மகன் கோழையென்பதுண்மையாயின்
அறுத்தெறிவேன் அவனுக்குப் பால் தந்த மார்பை என்ருள்!
ஓடினுள் போர்க்களத்தில் ஒவ்வோர்
சடலமாய்ப் புரட்டிப்பார்த்தாள்!
ஆங்கே மகனின் சடலம் கண்டாள்!
நெஞ்சிலே வேலேற்று நாட்டுக்காக,
நீடுதுயில் கொண்டசேயை முத்தமிட்டாள்
ஈன்றபோதில்லா மகிழ்ச்சி தன்னை
அன்றே கண்டாள் அவ்வீர அன்னை."

இது ஒரு புறநானூற்றுக் காட்சி. மிக மிகப் புளித்துப்போன, யதார்த்த எல்லைகளை விட்டு விலகிய, அதி கற்பனைவாத உதாரணம் இது. இந்த உதாரணத்தை வலிந்து இழுத்ததன் மூலம் — சமகால உலகத்தை விட்டு கோவை மகேசன் எங்கோ இன்னொரு உலகில் தான் இன்னமும் இருக்கின்ருர் என்பதை ஊர்ஜிதப்படுத்தி உள்ளார்.

கோவை மகேசன் தொட்டுக் காட்டிய உதாரணத்தை— சாதாரணமாக எவராலுமே சீரணிக்க முடியாது. களத்திலே தனது மகன் எதிரிப்படையால் கொல்லப்பட்டான் என்பதை முதற்றடவையாகக் கேட்கும் போது, ஈட்டி முதுகிலே பாய்ந்ததா? அல்லது நெஞ்சிலே பாய்ந்ததா என்ற ஆராய்ச்சியில் ஒரு தாயின் மனம் ஈடுபடத் துணியாது. பழங்காலத்தில், மக்களிடையே இன உணர்ச்சியை ஒரு வெறியாக ஊட்டுவதற்காக புலவர்களால் படைக்கப்பட்ட இந்தக் 'கற்பனை'களை 20ம் நூற்ருண்டின் கடைசிப் பகுதிகளிலும் அவிழ்த்துவிட்டுக்கொண்டிருப்பவர்களிடம் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஈழப்போராட்டத்தை ஒரு அசையா, கனவு நிலைகளில் வைத்திருக்கவே கோவை மகேசன் 'வீரவேங்கை' மூலம் முயன்று கொண்டிருக்கிருர். அவரது நிலைப்பாட்டின் மாயாஜாலங்களில் ஈழ மக்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் இருப்பதன் மூலமே ஈழ போரை சரியான முறையில் நகர்த்த முடியும். கோவை மகேசனின் எழுத்துக்கள் ஈழப் போருக்கு இம்மியளவுகூட உதவாது. என்பது வெளிப்படை. இத்தகைய இனவாதிகள், ஈழத்தை விசுவாசிப்பது உண்மையாயின் ஒன்றில் தமது பேணுக்களின் 'டிறெக்சன்'களை மாற்ற வேண்டும் அல்லது பேனுக்களிற்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவர்க்கத்தை உணர்ச்சிவசப்படுத்தி அவர்களது சிந்தனைகளை முடமாக்கும் பேனாக்களுக்கும் சிறீலங்கா இனவாத கூலிப்படைகளினது கைகளில் இருக்கும் ஆயுதங்களிற்கும் இடையில் வித்தியாசம் எதுவும் இல்லை.

— சவுந்தர்.

## நாடோடிக் கதை

# தலைக்கனம்

ஒரு இளவரசன் அயல் நாட்டின் மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டு தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரத் திர்மானித்தான். இதை கேள்விப்பட்ட அவனது நண்பன் உடனடியாக இளவரசனைப் பார்க்கச் சென்றான்.

''நான் வரும் வழியில் வடக்குத் திசையை நோக்கி குதிரையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு மனிதனைச் சந்தித்தேன். தெற்குத் திசையிலுள்ள ஒரு நாட்டிற்கு தான் சென்றுகொண்டிருக்கிறேன் என்று அவன் எனக்குக் கூறினான்''

''அப்படியென்றால் நீ ஏன் வடக்குத் திசையைநோக்கி சென்றுகொண்டிருக்கிறாய்'' என்று நான் அவனைக் கேட்கேட்டேன்.

''நான்தவறுசெய்யவில்லை; சரியைத்தான் செய்கின்றேன். சரியான மார்க்கத்தில்தான் செல்கின்றேன். ஏனென்றால் என்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கிறன'' என்று அவன் உறுதியுடன் பதிலளித்தான்.

'' 'நீ சிறந்த குதிரைகளை வைத்திருக்கக்கூடும். ஆனால் நீ தவறானதிசையில் சென்றுகொண்டிருக்கிறாய்!'.

'நன்று என்னிடம் ஏராளம் பணம் இருக்கின்றது' அவன் செருக்குடன் கூறினான்.

'' 'நீ போதிய பணத்தை வைத்திருக்கக்கூடும். ஆனால் நீ செல்வது பிழையான வழி.'

'' 'மிகநன்று. என்னிடம் மிகச் சிறந்த, கைதேர்ந்த தேரோட்டி இருக்கின்றான்' அவன் அழுங்குப் பிடியாக கூறினான்.

'' 'உன்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கலாம். உன்னிடம் ஏராளம் பணம் இருக்கக்கூடும். உனது தேரோட்டி கைதேர்ந்தவனாக இருக்கலாம். ஆனால் நீமுன்னேறிச் செல்லச் செல்ல, நீ செல்ல வேண்டிய நாட்டிலிருந்து மேலும் மேலும் தூரத்திற்குத்தான் சென்றுகொண்டிருக்கின்றாய். ஏனென்றால் நீ செல்லவேண்டிய சரியான திசை தெற்கு. அதற்குப் பதிலாக நீ தவறாக எதிர்த் திசையில், அதாவது வடக்கு நோக்கிச் செல்கின்றாயே!' ''

''நான் அவனுக்குவிளக்கிக் கூறினேன். நான் கூறியதை அவன் கேட்டால்தானே. அவன் தனது வழியிலேயே சென்று கொண்டேயிருக்கின்றான் ''

''முடிவு''

அனுபவம்சிறந்தஆசான்'

★ தமிழில்: நிர்மலா பொன்னையா

நன்றி: ஈழநாடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

## லிபியா மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெறியாட்டம்.



உலகம் முழுவதும் அப்பாவி மக்களைக் கொன்று அவர்களுடைய இரத்தத்தில் தன் கையை நனைத்தே பழகிப்போன அமெரிக்க ஏகாதிபத்தியம் இம்முறை தனது மனிதவேட்டையை லிபியாவின் மீது நிகழ்த்தியுள்ளது. 15.04.86 அன்று அதிகாலை பிரித்தானியாவிலுள்ள அமெரிக்க தளத்திலிருந்து புறப்பட்ட 18 F-111 போர்விமானங்கள் லிபியாவின் முக்கிய நகரங்களான திரிப்போலி, பெங்காசி ஆகிய நகரங்கள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 37 அப்பாவி லிபிய மக்கள் கொல்லப்பட்டதுடன் 93 பேர் படுகாயமடைந்தும், பல லிபிய மக்களின் வீடுகள், பிரான்சத் தூதரகம் ஆகியன நாசமாக்கப்பட்டுள்ளது. லிபியத் தலைவர் கடாபியையும் அவரது குடும்பத்தையும் அழிக்கும் நோக்குடன் சில விமானங்கள் குண்டுவீசியதில் கடாபியின் 14 மாத வளர்ப்பு மகள் கொல்லப்பட்டதுடன் சிறுவயதுடைய இரு மகன்களும் படுகாயமடைந்துள்ளனர். 18 F-111 போர்விமானங்களுடன் 14 A-6 போர்விமானங்களும் நடத்திய இக்குண்டுவீச்சுத் தாக்குதலில் லிபியப்படைகள் தீரமுடன் போராடி முறியடித்தன. ஒரு F-111 விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது, 2 A-6 விமானங்கள் தாக்குதல் நடத்தமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்டன. 7 F-111 விமானங்கள் தமது தாக்குதலின் இடையிலேயே கைவிட்டுத் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் இத்தாலிக்குச் சொந்தமான லம்பெடுசா தீவில் உள்ள அமெரிக்கத் தளத்தின் மீதும் லிபியா ஏவுகணைகளை வீசித் தாக்கியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய இத்தாக்குதலில் லிபியாவின் இராணுவத் தளங்கள் எதுவும் சேதமடையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்புக் கோசம்!

## ஈராக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சிதறும்.

லிபியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய கோர அக்கிரமமான தாக்குதல்களை அடுத்து உலகின் பல பாகங்களிலும் அமெரிக்க எதிர்ப்பு பெருந்தீயாய் பரவ ஆரம்பித்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான வன்முறைப் போராட்டங்களும், மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களும், உலகநாடுகளின் கண்டனங்களும் தொடர்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இத்தாக்குதலை ஐரோப்பிய நாடுகளில் பிரித்தானியா மாத்திரம் ஆதரித்து தட்சர் பிரித்தானியாவிலுள்ள தளத்திலிருந்து அமெரிக்க விமானங்கள் செல்ல அனுமதியளித்து றேகனின் அபிமான நண்பிதான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார். தனது பிராந்தியத்தின் மேலாக போர்விமானங்கள் பறக்க விடப் போவதற்கு அனுமதியளிக்க பிரான்ஸ் மறுத்தது. இதனால் விமானங்கள் மேலதிகமாக 1200 மைல்கள் பறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஸ்பெயினும், இத்தாலியும் கூட தமது தளங்களை உபயோகிக்க அனுமதி கொடுக்கவில்லை. மேற்கு ஜேர்மனியும் அமெரிக்கத் திட்டத்திற்கு உடன்படவில்லை. மேற்படி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ள சோவியத் யூனியன் விரைவில் அமெரிக்காவுடன் நடைபெறவிருந்த உச்சிமகாநாட்டை ரத்துச் செய்துள்ளது. அரபுநாடுகள் தமது ஆதரவை லிபியாவுக்கே அளித்துள்ளது போல கூட்டுச்சேரா நாடுகளும் நிபந்தனையற்ற தமது ஆதரவை லிபியாவுக்கே வழங்கி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன. ஐரோப்பாவிலும் மற்றும் உலகநாடுகள் பலவற்றிலும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. 66% மான பிரித்தானிய மக்களும், 75% மான மேற்கு ஜேர்மன் மக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இத்தாக்குதலை எதிர்த்துள்ளனர். அதேசமயம் சூடானில் அமெரிக்க தூதரக அலுவலர் ஒருவர் சுட்டுக்காயப்படுத்தப்பட்டுள்ளார், டோக்கியோவில் அமெரிக்க தூதரகத்துக்கு அண்மையில் குண்டுவெடிப்பு, லெபனானில் பணயக்கைதிகளாக இருந்த 2 அமெரிக்கர்களும், 2 பிரித்தானியர்களும் கொலை செய்யப்பட்டதுடன் 2 பிரித்தானிய உல்லாசப்பயணிகள் கடத்தப்பட்டுள்ளனர். எனவே அமெரிக்க ஏகாதிபத்தியம் விதைத்த வன்முறை வினை அமெரிக்காவை திருப்பித்தாக்க ஆரம்பித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்சில் தொடரும் அரசியல் நெருக்கடிகள்.

எதிர்வரும் இரண்டொரு காலங்களுக்கு பிரெஞ்சு மக்கள் பல அரசியல் நெருக்கடிகளை சந்திக்க வேண்டும் என்பதை சமீபத்திய சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தொழிலாளர்களை முதலாளிகள் தாம் நினைத்தபடி வேலையிலிருந்து நீக்குதல், அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை மீண்டும் தனியாரிடம் கையளித்தல் போன்ற புதிய வலதுசாரி அரசின் தீர்மானங்களுக்கு ஜனாதிபதி மித்திரோன் சம்மதிக்க மறுத்ததை அடுத்து ஏற்பட்ட இழுபறி தொடர்ந்து வந்தன. அவ்விடயத்தை தேசிய பிரதிநிதிகள் சபையில் வெற்றிகொள்ள நிர்ப்பந்தம் பிரதமர் சிராக்கிற்கு ஏற்பட்டது. மேற்படி தீர்மானம் தொடர்பாக சபையில் நடந்த வாக்கெடுப்பில் மிகக்குறைந்த பெரும்பான்மையினால் (292 - 285) மட்டுமே அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றது. அதேசமயம் கடந்த காலங்களில் சோசலிசக் கட்சி பிரெஞ்சு பிராங்கின் பெறுமதியினை குறைத்தபோது வன்மையாகக் கண்டித்து வந்த இந்த வலதுசாரிக் கட்சி பிரெஞ்சு பிராங்கின் பெறுமதியை 5.8% ஆல் குறைத்துள்ளது. இதை வன்மையாகக் கண்டித்துள்ள சோசலிசக் கட்சி தம்மால் குறைக்கப்பட்ட பணவீக்கத்தை (13.5% இலிருந்து 3.4%) அரசின் இச்செயல் மீண்டும் அதிகரிக்கும் என எச்சரித்துள்ளது. அத்துடன் அரசு சமூக நலச் செலவுகளில் பெருந்தொகை வெட்டை மேற்கொண்டுள்ளதுடன் ஊழியர்களின் ஊதிய உயர்வுகளை நிறுத்தியுள்ளது. அத்துடன் விலைக்கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளன.

அத்தோடு பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட சுமார் 30 வட ஆபிரிக்கர்களை, சட்டமயமான அடையாள சோதனைகள், வதிவிடப் பத்திரமற்றோரை வெளியேற்றுதல் புதிய திட்டங்களையும் அரசு அறிவித்துள்ளது. இது இவ்வேளையில் இங்கு பிரதமர் சிராக்கிற்கும் U.D.F தலைவர் ஜிஸ்கார்டெஸ்டெங்கிற்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பாராளுமன்ற சபாநாயகர் பதவிக்கு ஜிஸ்கார்ட் வராமல் சிராக்கினால் தடுக்கப்பட்டதை தொடர்ந்து ஜிஸ்கார்ட் பல இடங்களிலும் அரசாங்கத்திற்கான தமது பகிரங்க கண்டனங்களை வைத்து வருகிறார். இந்த இடைவெளி அதிகரிப்பின் அரசு பெரும் நெருக்கடியைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹொண்டுராசில் 'கொன்ராசின்' செயல்கள் அதிகரிக்கின்றன.

சர்வதேசப் பயங்கரவாதி ரேகன் அன்புடன் 'சுதந்திரப் போராளிகள்' என்றும் 'விடுதலைப் போராளிகள்' என்றும் அழைக்கப்படும் நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்கள் (CONTRAS) ஹொண்டுராசில் நிலைகொண்டு சி.ஐ.ஏ யினால் பயிற்சியளிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இந்த உண்மையை நிக்கரகுவா அரசு உலக அரங்கில் பகிரங்கப்படுத்திய போதெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான ஹொண்டுராஸ் அரசு மறுத்து வந்தது. இறுதி சமீபத்தில் நிக்கரகுவா படைகள் ஹொண்டுராசில் உள்ள எதிர்ப்புரட்சியாளர்களின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கானோரைக் கொன்று பலத்த சேதமும் விளைவித்ததை அடுத்து உலக அரங்கில் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. அதேசமயம் நிக்கரகுவாவிலும், ஹொண்டுராசிலும் நடந்துவரும் பல கொலைகள், கடத்தல்களுக்கு காரணமானவர்கள் இந்த சி.ஐ.ஏ. யின் கூலிப்படைகள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹொண்டுராசில் இவர்கள் இருக்கக்கூடாது என எதிர்த்த 36 கிறிஸ்தவ குருக்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது ஹொண்டுராஸ் மக்கள், பத்திரிகைகள், இராணுவத்தில் ஒரு பகுதியினர் ஆகியோர் ஹொண்டுராசிலிருந்து இந்த நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். அதேசமயம் போதைவஸ்துக் கடத்தலில் நிக்கரகுவா அரசு ஈடுபட்டுள்ளது என்ற ரேகனின் கருத்தை நிராகரித்த அமெரிக்க போதைவஸ்து புலனாய்வுத் துறையும் இக்கடத்தலில் கொன்ராஸ் சம்பந்தப்பட்டுள்ளதைக் கண்டுபிடித்துள்ளது. நிக்கரகுவா அரசாங்கத்திற்கு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த சி.ஐ.ஏ [illegible] கொகெயின் — ஹெரொயின் [illegible] [illegible] புரட்சியாளர்கள் சாட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள முடியாத கடன் நெருக்கடியில் உலக நாடுகள்.

முதலாளித்துவப் பொருளாதாரத் தத்துவம் இன்று உலகின் ஒவ்வொரு மூலையிலும் சிதறிக்கொண்டிருக்கிறது. அதன் விளைவுதான் இன்று 110 உலகநாடுகளின் மொத்தக் கடன்தொகை 1 ரில்லியனை நெருங்கிக்கொண்டிருக்கின்றன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 1985இல் 950 பில்லியன் டொலர்களாக இருந்த இக்கடன் தொகை 1986 இல் 1,010 பில்லியன் டொலர்களாக எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 17 நாடுகள் உலகின் அதிக 'கடன்கார' நாடுகள் என அறிவிக்கப்பட்டுள்ளன. பிரேசில் (107.3 பில்லியன் $), மெக்சிக்கோ (99 பில்லியன் $), ஆர்ஜென்ரீனா (50.8 பில்லியன் $), வெனிசுவேலா (33.6 பில்லியன் $), பிலிப்பைன்ஸ் (24.8 பில்லியன் $), சிலி (21 பில்லியன் $), யூகோஸ்லாவியா (19.6 பில்லியன் $), நைஜீரியா (19.3 பில்லியன் $), மொராக்கோ (14 பில்லியன் $) பேரு (13.4 பில்லியன் $), கொலம்பியா (11.3 பில்லியன் $) ஈக்குவடோர் (8.5 பில்லியன் $), ஐவரி கோஸ்ற் (8 பில்லியன் $) இதர நாடுகளான கொஸ்ராரிக்கா, உருகுவே, பொலிவியா, ஜமேக்கா ஆகியன தலா 4 பில்லியன் $. அதிகரித்துச் செல்லும் இக்கடன் எண்ணிக்கை வங்கிகளுக்கு பெரும் கலக்கத்தைக் கொடுத்துள்ளது.

## இனப்படுகொலை நடப்பதை பார்த்திருக்க முடியாது - ரமேஷ் பண்டாரி.

அப்பாவி இலங்கைத் தமிழ் மக்கள் நாளாந்தம் இனப்படுகொலைக்கு உள்ளாவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலையடைகின்றது. இந்நிலைமை தொடர்வதை இந்தியா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. என திரு. ரொமேஷ் பண்டாரி கூறியுள்ளார். அண்மையில் புதுவருடத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் விடுத்த கோரிக்கையில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை அளித்து அவர்களை இனப்படுகொலையிலிருந்து காப்பாற்ற இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்திய வெளிவிவகார அமைச்சர் பகத், கொள்கைத் திட்டக் குழுத் தலைவர் பார்த்தசாரதி, றொமேஷ் பண்டாரி ஆகியோர் கூடி இலங்கையில் அண்மையில் இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

- இலங்கையின் இன்றுள்ள சூழ்நிலை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சத்தையும், அபாயத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது என இந்திய அரசு கூறியுள்ளது.

- 'கொலிவே, மார்க்கோஸ் வரிசையில் பாகிஸ்தானின் சர்வாதிகாரியான ஜியாவுல் ஹக்கும் புதிதாக இணைக்கப்பட வேண்டும்' என ராவல்பிண்டியில் பெனாசிர் பூட்டோ பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் கூறியுள்ளார்.

- சர்வதேச ரீதியாகவும், அமெரிக்காவிலும் நிலவிவந்த கடும் எதிர்ப்புக்களையும் மீறி றேகன் நிர்வாகம் நெவாடா பாலைவனத்தில் தனது 758 வது அணுப் பரிசோதனையைச் செய்துள்ளது.

- 'இலங்கை பிளவுபடுவதை இந்தியா விரும்பவில்லை. இதன் காரணமாக இலங்கைத் தமிழ் மக்களின் போராட்ட இயக்கங்களை S.W.A.P.O அல்லது P.L.O போன்று அங்கீகரிக்க முடியாது' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பகத் தெரிவித்துள்ளார்.

- 'சட்டமும் நீதியும் செத்த ஒரு சூழ்நிலையிலேயே இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சுயபாதுகாப்பின் நிமித்தம் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அரச யந்திரம் தமக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள தருணத்திலும் தமது இன்னல்களை எடுத்துரைக்க ஓர் அரசியல் ரீதியான அமைப்பு இல்லாத சூழ்நிலையுமே தமிழ் இளைஞர்கள் கிளர்ச்சியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர்' என தமிழக முதலமைச்சர் கூறியுள்ளார்.

- 'இலங்கை இனப்பிரச்சினையில் இஸ்ரேலினதும், பாகிஸ்தானதும் பங்கு அதிகரித்துவருவதால் இலங்கை நிலைமை மேலும் சிக்கலடைந்து வருவது மட்டுமன்றி, இதனால் இலங்கையில் வல்லரசுகள் தலையீடு மேற்கொள்ளும் அபாயம் தோன்றியுள்ளது' என திரு. பகத் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் பெயரில் என்ன இருக்கிறது

## கருத்து / வரேந்திர தார்ஷி விதாச்சி

(NEWSWEEK வாரசஞ்சிகையில் பிரசுரமான இந்தக்கட்டுரையை எழுதிய வரேந்திர தார்ஷி விதாச்சி இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உலகப் புகழ் பெற்ற பத்திரிகையாளரான இவர் எழுதிய "1960" என்ற நூல் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள்மீது தொடக்கப்பட்ட இனக் கொலையைப் புள்ளிவிபரங்களுடன் முதன் முதலில் உலகெங்கும் அம்பலப்படுத்தியது. நேர்மை, சத்தியம், அகியவற்றின் தடத்தில் தனது பேனாவை நகர்த்தும் தார்ஷி விதாச்சி தற்போது UNICEF இன் DEPUTY DIRECTOR ஆகப் பணி புரிகின்றார். அவரது ஆங்கில எழுத்துக்களின் மொழி பெயர்ப்பைத் தமிழ் பேசும் மக்களிடையே கொண்டு வருவதில் "தமிழ் முரசு" பெருமையடைகின்றது)

பயங்கரவாதம் என்பது வன்முறையின் புதிய வடிவமா அல்லது புதிய முத்திரை குத்தப்பட்ட பழையதும் நமக்குப் பழக்கமான ஒரு இயல்பான நடைமுறையா? புதிய இடம், சூழ்நிலைகளும் - உதாரணமாக பறந்துகொண்டிருக்கும் ஆகாயவிமானத்தில்; பரபரப்பு நிறைந்த நகரவீதிகளில்; பெரிய உல்லாசப்பயணிகளின் விடுதிகளில் இன்றைய பயங்கரவாதத்தில் இவை இடம்பெறுகின்றனவே தவிர எதுவும் புதியதாகஇல்லை. ஆயிரம் வருடங்களுக்கு முன்னுடி பழைய பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மக்களின் வதிவிடங்களைத் தாக்கிய ஈவிரக்கமற்ற கொள்ளைக் கோஷ்டி திமூரிலும், கொழும்பிலும் தாங்கி வழிந்த துறைமுகங்களைக் கிட்டத்தட்ட 500 வருடங்களிற்குமுன் பீரங்கிகளால் முழக்கமிட்டுத் தாக்கி, கடற்கரையோரக் கிராமங்களில் இரத்தினங்களையும், திரவியங்களையும் கொள்ளையடித்துச் சென்ற போத்துக்கேயர் - இவர்களின் சிந்தனையற்ற கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை எவ்விதத்திலும் இன்றைய பயங்கரவாதத்தை விடக் குறைந்ததல்ல. எங்களிற்கு எப்படி முதன்முதலாக நடந்த விமானக் கடத்தற் சம்பவம் இருந்ததோ, அதுபோலவே அன்றைய பாதிக்கப்பட்ட மக்களிற்கு கொள்ளையிட்டவர்களின் ஆயுதங்களும், வன்முறையும் திகைப்பையும், திகிலையும் கொடுத்தன.

சரியான ஆராச்சியற்ற தன்மையதும், ஒருவித விருப்பும் காரணமாகத்தானு "பயங்கரவாதம்' என்ற சொல்லை எடுத்தாள நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம்? முதலாவது எலிசபெத் ராணி, பிரான்சிஸ் டிரேக் என்பவர் ஸ்பானியக் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்துத் தங்கம் கொண்டுவந்ததும் அவருக்கு இராச கௌரவம் கொடுக்கவில்லையா? பிரித்தானிய மக்களும் பிரான்சிஸ் டிரேக்கை ஒரு வீர நாயகனுகவும் தேச பக்தனுகவும் மதித்துப் போற்றினூர்கள். ஆனல், ஸ்பானியர்கள் அதேமாதிரி கொள்ளையை பிரித்தானிய கப்பல்களிற் செய்தபோது அவர்கள் கடற்கொள்ளையர்கள் என்று தூற்றப்பட்டார்கள் ஓாயிமவுண்ட்பாட்டனின் போர்வீரர்கள் இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஜேர்மனியத் தொழிற்சாலைகளையும், முக்கிய பாகங்களையும் தகர்த்து எறியவும்- சதிவேலைகளை ஜேர்மனியிலிருந்தே மேற்கொள்ளவும் அனுப்பப்பட்டபோது அவர்கள் 'கொமோன்டோக்கள்' எனப்பட்டார்கள். 'பயங்கரவாதிகள்' என்ற சொல் ஜேர்மனியரின் பேச்சு வழக்கில் அன்றும் இன்றும் அடிபடுவதைப்போல இருந்திருந்தால் நிச்சயமாகச் சந்தேகமின்றி பயங்கரவாதிகள் என்ற பட்டம் மவுண்ட்பாட்டனின் ஆட்களுக்குச் சூட்டப்பட்டிருக்காதா?

யூதரின் தாயகம் என்று கருதப்பட்ட பலஸ்தீனத்தை 'மீட்கப் போராடிய 'இர்குனின்' வீரர்களும் ஒரு காலகட்டத்தில் அதே பலஸ்தீனத்தைப் 'பாதுகாத்த' பிரித்தானியர்களினுல் பயங்கரவாதிகள் என்றே சொல்லப்பட்டனர். 'இஸ்ரேல்' நாடு தாபிக்கப்பட்டதும், இந்தப் 'பயங்கரவாதிகளில்' பலர் முக்கிய பதவிகளை வகித்தும், அவர்கள் சுதந்திர வீரர்கள் என்று ஏற்றிப் போற்றப்பட்டதும் யாவரும் அறிந்ததே! ஆனல், இப்போது இதே பாலஸ்தீனத்தில் வாழ்ந்த பின்பு அகதியான மக்களின் போராட்ட இயக்கமான யசீர் அரபாத்தைத் தலைவராகக் கொண்ட PLO இன் வீரர்கள் பயங்கரவாதிகள் என்று கூறப்படுகின்றனர். நிக்கரகுவாவின் சான்டினிஸ்டா எதிர்ப்புரட்சிவாதிகளை நிக்கரகுவாவின் அரசாங்கம் தேசப்பற்றற்ற கூலிப்பட்டாளம் என்று கூறுவதும் அதே குழுவை அமெரிக்காவின் றேகன் நிர்வாகம் சுதந்திர வீரர்கள் என்று போற்றுவதும் - அவர்களை, பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து அமெரிக்காவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருவிக்கப்போராடிய சுதந்திர வீரர்களை ஒத்த தேச பக்தர்கள் என்று ஒப்பிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காட்சிகள், நடிகர்கள், இடங்கள், ஆயுதங்கள் வேறுபடுவதுடன் சூழ்நிலைகளுக்கும் காலத்துக்கும் ஏற்றபடி கட்சிகள் மாறுவதும், நோக்கங்களும் அதற்கேற்ப மாறுபடுவதும் மட்டுமே நடைபெறுகின்றன. நோக்கங்கள் வலுவானவையா, இல்லையா என்பது அவரவர்களின் அரசியல், பொருளாதார, மத காரணிகளுக்காக என்பது நிச்சயிக்கப்பட்டாலும் அந்தந்த நோக்கங்களை அடைய செயல்படும் முயற்சிகள் வன்முறையையேஅடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனினும், எமது முதாதையர்களுக்கும் எமக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்னவெனில் உபயோகிக்கப்படும் வன்முறையின் 'தரம்'ஆகும். ஆதிமனிதர்கள் கையோடு கை, உடலோடு உடல், ஆயுதத்தோடு ஆயுதம் மோதிச்சண்டையிட்டார்கள். பின் அவர்களின் சந்ததியினர் தங்களுக்கிடையில் சிறிது இடைவெளி வைத்து நாண் கொண்டு கல் எறிந்தும்– வில், அம்பு உபயோகித்தும் ஒருவரை ஒருவர் தாக்கினர். மேலும் சண்டையானது 'நேருக்குநேர்'என்ற நிலையிலிருந்து விலகி வந்தாலும் பின்பும் 'நேருக்குநேர்' என்ற நிலை இருந்தே வந்தது. ஒருவித துணிவும் பயிற்சியும் இத்தகைய வன்செயல்களுக்கு ஆமோதிப்பைக் கொடுத்து விட்டது மட்டுமல்லமக்கள் அவ்வன்செயல்கள் 'நியாயப்படுத்தப்பட்ட வன்முறை'கள் என்று நம்பவும் தூண்டப்பட்டார்கள். இவ்வித வன்செயல்கள் 'நியாயமான' நடைமுறைகளிற்கு உட்பட்டு நடைபெற்றதால், அவை, அன்று கௌரவத்திற்கும் உரியனவாகி இருந்தன.

பின்பு மனிதர்கள் ஏவுகணைகள் முதலானவற்றைக் கண்டுபிடித்து அவற்றை ஏவி தங்களுக்கிடையிலான பிரச்சனைகளை வன்முறையின் மூலம் தீர்க்க முயற்சிக்கும் போது வன் முறையின் 'தரம்' அடிப்படையிலேயே திரிபடைந்து விடுகின்றது. பகைவன் மிகத் தூரத்தில் உள்ள அறிமுகமில்லாதவனாகி விடுகிறான் எனக் கணிப்பதும், தனிப்பட்ட மனிதனை இன்னான் என்றோ அல்லது அவன் அணிந்துள்ள சீருடையின் மூலமாகவாவது ஏதாவது அடையாளங்காணவோ முடியாதவாறு தூரம் தடுக்கிறது. மாறாக சகலரையும் மனித மந்தைகள் என்றும் அவர்களில் போர்வீரர்கள் யாரென்றும் பெண்கள் குழந்தைகள் யாரென்றும் பிரித்துப் பார்க்க முடியாமல் இன்றைய போர் நடக்கிறது. பகைவனின் நாட்டிலுள்ள சகலரும் வயது, பால்,பேதமின்றிப் பொதுவான எதிரியாகக் கருதப்பட்டு அணுகுண்டுகளுக்கும், பீரங்கி மோட்டார் தாக்குதலுக்கும் தகுதிபடைத்தவர்களாகின்றனர். ஒரு நாள் வரும்– அன்றைய போரில் ராக்கெட்டில் பொருத்திச் செலுத்தக்கூடிய கிருமிக்கலசங்களும், லேசர் செல்கதிர்களும் பாவனையில் இருக்கும். அந்த நிலைமை விரைவிலோ தாமதமாகவோ வரலாம்.

தகர்க்கப்படுமிடம் வரவர தனித்துப் பிரித்துப் பார்க்க முடியாததாயும் தொலைவிலும் அமைந்து வருகின்றது. எம்முன்னோர் வகுத்த 'நியாயமான நடைமுறைகளுக்கு' ஒவ்வாததால் தாக்கப்படுமிடங்கள் அடங்குகின்றன. ஒரு இடம் தாக்கப்பட நியாயமான காரணமெதுவும் கற்பிக்கப்பட இன்று தேவையில்லாததாகி விட்டது. எதிர்த்தாக்குதல் ஏதும் நடக்கும் சந்தர்ப்பங்களைக் கூடியளவு குறைப்பதே இன்றைய போரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகிறது. புதிய பயங்கரவாதம் இன்றைய ஆயுதங்களின் நவீனத் தன்மையை நன்கு பயன்படுத்துகின்றது. தொலைவிலிருந்து எலெக்ரோனிக் கருவிகளின் மூலம் இயக்கப்படக்கூடிய வெடிகுண்டு மற்றும் அழிவு ஆயுதங்களை இக்குழுவினர் மறைவிலிருந்து பயன்படுத்தி சேதங்களை ஏற்படுத்திய பின்பு அத்தாக்குதல்களிற்கு 'உரிமை' கோருகின்றனர்.

எனினும், வியப்படையத்தக்க விடயம் என்னவென்றால் விமானக்கடத்தல்காரர்களும் விமானநிலையத்தில் உல்லாசப்பிரயாண கோட்டல்களில் வெடிகுண்டு வைப்பவர்களும், வழிபாட்டாளர்களை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுபவர்களும், கார்– வெடிகுண்டு தற்கொலைப்படையினரும், ஆட்கடத்திக் கப்பம் கேட்போரும் இன்று கையாளும் அச்சம் தரும் உத்திகளே! இவர்கள், எமது முன்னோர்கள் கையாண்ட 'நேருக்குநேர்' வன்செயல் வடிவத்தையே இன்று பின்பற்றுகின்றனர். இந்த நேருக்குநேர் வன்செயல்கள் நியாயங்கள் இருந்தோ இல்லாமலோ நடைபெற்றாலும் அவைகளை ஒப்பு மதிப்பீடு செய்ய எந்தவித நியாயப்படுத்தப்பட்ட நடைமுறைகளும் இன்றைய காலகட்டத்திலில்லை. நேருக்குநேர், உடலுக்கு உடல் உரசிச் செய்யும் இச்சண்டையானது பதில் குறிகளைத் தாக்கியும், கண்முடித்தனமாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களை இரையாக்கியும் திருப்தியடைகின்றது.

இறுதிவழி: அநேகமாக ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் இன்றைய பயங்கரவாதிகளிடையே காணப்படுகின்றது. அது என்ன? தங்கள் சொந்தத் திகிலூட்டும் மரணத்துக்குக்கூட அஞ்சாமல் அவர்களின் மனோநிலை, வைராக்கியம் மிகுந்திருப்பதுதான். சமுதாய, நாட்டு மற்றும் எழுதப்பட்ட எழுதப்படாத எல்லா மனித இயல்புதொடர்பான சட்ட திட்டங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் மரணத்தின் மூலம் ஏதாவதொன்றை அடைவது இறுதி வழி, தீர்வு என்றே கூறுகின்றன. முன்னர் பக்தர்கள், போர்வீரர்கள், கடல்கொள்ளையர்கள், கொரில்லாக்கள் மற்றும் கொலையாளிகள் உயிரைக்கொடுத்து தங்கள் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைய முனைந்திருக்கிறார்கள், அடைந்திருக்கிறார்கள். ஆனால், சாகத்துணிந்தது, அதுதான் இறுதியான வழி என்று சந்தேகமறத் தீர்மானித்தபிறகுதான். ஆனால் இன்றைய பயங்கரவாதிகள் சாகத்துணிவதை அநேகமாகத் தங்களின் முதல் வழியாகத்தான் தெரிவு செய்கிறார்கள்.

மனித இயல்பு பற்றி மனிதவியல் விஞ்ஞானிகளும், உளவியலாளிகளும்— காமுகர்கள், வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள், கொலையாளிகள், தற்கொலை செய்து கொள்பவர்கள், கூலிக்குக் கொலை செய்பவர்கள் இவர்களைப் பற்றிக் கூறும்போது என்ன சொல்கிறார்கள்? சிறு வயதில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்கள், மத ரீதியான தீவிர நம்பிக்கைகள், கொள்கைகள் அல்லது மன நோய்கள் இவைகளில் ஏதாவது ஒன்று மனிதர்களை இத்தகைய வன்செயல்களில் ஈடுபடத்தூண்டியிருக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். எனினும் அவர்களின் ஆராய்ச்சிகள் விஞ்ஞான ரீதியான வரம்பு கட்டுப்பட்டு நடப்பதால் எண்ணிக்கையையும் விளைவுகளையும் கோடிட்டுக் காட்டுகின்றனவே தவிர வன்செயலின் தரத்தைப் பெரும்பாலும் எதிரொலிப்பதில்லை. அமெரிக்க ஐரோப்பா, ஆசியத் துணைக்கண்டம், ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இளம் ஆண்களையும், பெண்களையும் வலிந்திழுக்கும் பயங்கரவாதம் எப்படி சமுதாய வரம்புகளை மீறி இவர்கள் எல்லோரையும் தன் வசம் ஈர்க்கின்றது. இந்தக் கவர்ச்சியினுக்கு இவர்களால் விளக்கம் கொடுக்க முடியுமா? வன் முறை மேலும் வன்முறையையே கொண்டுவரும் என்று தெரிந்தேகொண்டும் தங்கள் நோக்கங்களை அடைய வன்செயல்களை நாடும் இளைஞர்களின் இயல்புக்குவிஞ்ஞானிகளால் எதுவித விளக்கமும்கொடுக்கமுடியாமல் உள்ளது. பிறர் அந்நியர் என்பதற்காகக் கொல்லப்படவும், முடமாக்கப்படவும் கூடியவர்கள் தான் என்ற எண்ணத்தை இளைஞர்களிடமிருந்து மாற்ற வழி என்ன? இந்தப் பயங்கரவாத இளைஞர்கள் வாழப்பிறந்தவர்களே தவிர சாகப்பிறந்தவர்கள் அல்ல என்ற உண்மையை அவர்களுக்கு எடுத்துக்கூறி மனமாற்றம் செய்ய வழி என்ன?

தமிழில்: எஸ். ஞானசந்திரன்.



தளபதி சிவா

ஆக்கிரமிப்பு எதிர்ப்படைகளுடன்
வீரமுடன் போரிட்டு
வீர மரணமடைந்த
மக்கள் விடுதலைப் படையின் தளபதி
தோழர் சிவாவை
நினைவு கூர்வதுடன்
எமது சிவப்பு வணக்கத்தையும்
தெரிவிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் சின்னவன். ஒரு சிவப்பு நட்சத்திரம்



3.5.85 அன்று
எதிரிப் படைகளின்
காரைநகர் தளத்தை
வெற்றிகரமாகத்
தாக்கி எதிரியை
விரட்டியடித்து
மக்கள் விடுதலைப்
படைக்குத் திறமை
தாக்கி வெற்றியைப்
பெற்று வீரமரண
மடைந்த தோழர்
சின்னவனுக்கு
எங்கள்
சிவப்பு வணக்கம்.

தோழர் சின்னவன்

அன்று,
வீதிக்கு வீதி
மேடைகள் போட்டு - வீணருக்கு
மாலைகள் இட்டோம் - வெறும் வீணருக்கு
மாலைகள் இட்டோம்.

இன்றைய இழப்புக்கள்
இல்லாத
பொழுதுகள் தான் - ஆனாலும்
அன்றுதானே
தொடங்கின இத் துன்பங்கள்

வெள்ளம் வருமென்றறிந்தும்
அணைகட்ட மறந்தவர்க்கு
இரத்தத்தால்
திலகங்கள் நாம் இட்ட
அன்று தானே
தொடங்கின இத்துன்பங்கள்

ஆண்ட பரம்பரைக் கதைகளில் - நாம்
பசி - பட்டினி மறந்திருந்த
அன்று தானே
தொடங்கின இத்துன்பங்கள்

வடக்கிற்கும் தெற்கிற்கும்
எங்கள் மன்னவர்
வாய்ப்பந்தல் போட
மத்தியில் வாழும் மலையகத்தவனை
நாம் மறந்த
அன்று தானே
தொடங்கின இத் துன்பங்கள்.

வாய்ப்பந்தல் போட்ட
எங்கள் மன்னவரெல்லாம் - சொந்த
மண்ணினை மறக்க
நேற்றைய சின்னவன்
எழுந்து
காற்றையும் கடலையும்
பெருங் காட்டையும்
கையிலே கொண்டான்

தன்-
ஆவிக்குள் அனலாகி - அவன்
மானுட
அன்பையும் கொண்டான்,

அன்பையும் அறத்தையும் கொண்டவர்
உலகை
வென்றதை அறிந்தான்-
அவன் - அரும்
கண்களை வித்துக்
கையினை கொன்னும்
காரியம் செய்யான்-

இன்றைய துயருக்குள் துயராகி
அவன்
நாளைய விடிவிற்கு
நாயகன் ஆவான.

சங்கே முழங்கில்
[illegible]
கொழும்பிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வெற்றி ஈழப் பாட்டாளிகளுக்கே!

இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னகத்திலிருந்து ஆங்கிலேயரால் விலங்கிடப்படாத அடிமைகளாய் இலங்கைத் தீவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தமிழர்கள் இன்று இலங்கை சர்வதேச ரீதியில் நிலைத்து நிற்பதற்கு அயராது உழைத்து உரிமையிழந்து நிற்கின்றனர். இன்று இலங்கையின் பொருளாதாரத்தில் மூன்றில் இரண்டு பங்கு அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுத்து வருகின்ற தேயிலையை மூன்றிற்கு மூன்று பங்காக்குவதற்காக மூன்று தலைமுறையை அத் தேயிலைக்கே உரமாக்கி விட்டு இன்றுள்ள நான்காவது தலைமுறையினருக்கு நாடற்றவன் என்ற பெயர் சூட்டி அதற்கு ஒப்பந்தம் என்ற நாகரீகமான சொல்லைப் பயன்படுத்தியுள்ளன இலங்கை- இந்திய அரசுகள்.

சமீபத்தில் இந்த நாடற்ற 94,000 இந்திய வம்சா வழித் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க இலங்கை இனவாத அரசு முடிவு செய்து பாராளு மன்ற வாக்கெடுப்புக்கு விட்டபோது இப்பிரேரணையை ஆதரித்துப் பேசிய பிரதமர் பிரேமதாசா 'இந்த இந்திய வம்சா வழித் தமிழர்கள் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்தவர்கள்' என்று தனக்கு இது கால வரையும் கசந்த ஓர் உண்மையை ஒப்புக் கொண்டார். இக்குடியுரிமை வழங்கலை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்த்தபோது, மலையகத் தமிழர்களுக்கு நாம் குடியுரிமை வழங்கா விட்டால் அதைச் சாட்டாக வைத்து இந்திய அரசு எம்மை ஆக்கிரமிக்கக் கூடும் என்ற தனது ஐயப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்,.

இதே பிரதமர் கடந்த ஆண்டு பாராளு மன்ற உரையின் போது இந்திய அரசு முடியுமானால் எம்மீது படையெடுத்துப் பார்க்கட்டும் என்று சவால் விட்டவர். இப்போது மலையகத் தமிழருக்காகப் பரிந்து பேசுவதன் பின்னணியில் ஓர் அரசியல் சூதாட்டம் நடந்திருக்கின்றது என்பதையும் இச் சூதாட்டத்தில் யார் யாருக்குப் பங்குண்டு, இதனால் அவர்கள் எத்தகைய அரசியல் லாபத்தை எதிர் பார்க்கின்றனர் என்பது போன்ற உண்மையையும் ஆராய்ந்தறிய வேண்டிய நிலையிலுள்ளோம்.

மலையக மக்கள் தனித் தேசிய இன மென்ற சிறீலங்கா இனவாத அரசின் பிரகடனமும் இவர்களுக்குப் போலி வாக்குரிமையையும் சில அற்பமான சலுகைகளையும் வழங்குவதன் மூலம் ஈழமக்களிலிருந்தும் ஈழ விடுதலைப் போராட்டத்திலிருந்தும் மலையகத் தொழிலாள வர்க்கத்தை நிரந்தரமாகப் பிரித்து விடலாம் என்ற மட்டற்ற மகிழ்ச்சியில் மிதந்த சிறீலங்கா தரகு முதலாளித்துவ அரசிற்கு மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் சமீபத்திய உணர்ச்சி மிக்க எழுச்சி ஓர் பேரடியாக விழுந்துள்ளது.

இத் தொழிலாளர் எழுச்சியை அடக்கி ஒடுக்கி விடும் நோக்குடன் சிறீலங்கா இனவெறி அரசு தனது கைக் கூலிகளையும் குண்டர்ப் படைகளையும் (காடையர்) மலையகத்தினுள் அனுப்பி அங்கும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தி, மலையகத் தமிழ் மக்களைப் பயமுறுத்திப் பணிய வைத்துத் தன்னை அங்கு நிலைநிறுத்திக் கொள்ள முனைகின்றது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஏகோபித்தத் தலைமைத்துவமெனத் தன்னைக் கூறிக் கொள்கின்ற இ. தொ. காவை, தனது இச் செயற்பாடுகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றது. சிறீலங்கா முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு அடிவருடிக் கொண்டிருக்கின்ற இ. தொ. கா. வின் தலைமைத்துவமும் தன்னைத் தொழிலாளர்களின் தோழன் என்று வெளி உலகிற்குக் காட்டிக் கொண்டு தொடர்ந்தும் தொழிலாளர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காது அவர்களைப் பின்னோக்கி இழுக்கின்றது.

இதுவரைக் காலமும் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரச் சுமையை

இறக்குவதாகக் கூறி அவ்வப்போது பெரிய வேலை நிறுத்தங்களை நடத்திச் சில்லரைச் சம்பள உயர்வைப் பெற்றுத் தந்து கொண்டிருந்த இ. தொ. காவிற்கு இச் செய்கை வழமையாகப் போகவே வாக்குரிமைப் பெற்று விட்டால் உங்கள் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்ந்து விடும் என்ற புதிய கோட்பாட்டை தொழிலாளர்களுக்குப் புகட்டி அவர்களைப் போராட்ட வழியிலிருந்து பின்னோக்கி இழுத்து பிரார்த்தனை என்ற முதலாளித்துவ தந்திரோபாயச் சொல்லைப் பயன்படுத்தி தாம் 94, 000 தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை பெற்றுத் தந்து விட்டதாகக் கூறி மார்தட்டிக் கொள்கின்றது.

ஆனால் உண்மையில் இ. தொ. கா. வின் பிரார்த்தனையால் வர்க்குரிமை வழங்கப் படவில்லை. சிறீலங்கா முதலாளித்துவ அரசின் பிரித்தாளும் தந்திரமே இது என்பதைப் புத்தி ஜீவிகள் உணரத் தலைப் பட்டுள்ளனர். சிறீமாவோ பண்டார நாயக்காவிற்கு சிவில் உரிமைகளை வழங்கி இவர் மூலமாக மலையகத்தில் இனவெறியைத் தூண்டி விடுவதே இந்தப் பாசிச ஜயவர்த்தனா அரசு என்பதை மக்கள் நன்கறிவர். ஆட்சியாளரின் இனவெறிக் கொள்கையை இதுவரைக் காலமும் நியாயப் படுத்தி வந்த பிரதமர் பிரேமதாசா இப்போது மலையக மக்களுக்காக வக்காளத்து வாங்குவது ஆடு நனைய ஓநாய் அழுத கதையை எம் மக்களுக்கு நினைவூட்டுவதாக உள்ளது.

இத்தகைய இனவெறி கொண்ட முதலாளித்துவ அரசுடன் இ. தொ. கா தொடர்ந்து இணைந்திருக்குமாயின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களால் விரைவில் தூக்கி எறியப்படும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் சந்தர்ப்ப வாத அரசியல் நடத்தும் இ. தொ. கா. வையும் ஏனைய முதலாளித்துவத் தொழிற்சங்கங்களையும் தூக்கி எறிந்து விட்டு அங்கு தொழிலாளர்களின் உணர்வுகளை மதிக்கக்கூடிய, மலையகத்தை ஒன்றுபடுத்தி வழிநடத்தக்கூடிய, ஓர் உண்மையான தலைமைத்துவத்தை உருவாக்கிட முன்வருமாறு இத் தருணத்தில் அறை கூவி அழைக்கின்றோம்...

**இறுதி வெற்றி ஈழப் பாட்டாளிகளுக்கே!**

நன்றி : எரிமலை.

தோழர்களே!

ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பான கட்டுரை, கவிதை, கதை போன்றவற்றை 'தமிழ் முரசு' உங்களிடம் எதிர்பார்க்கிறது. இத்துடன் 'தமிழ் முரசை' நெறிப்படுத்துமாறும் தோழமையுடன் வேண்டுகிறோம். இணைந்து தொடர்பு கட்டும் ....

THE EDITOR
'TAMIL MURASU'
EELAM LIBARATION COUNCIL (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

MURASU : 4
OLI : 7

MAI - 1986 .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL




MURASU-55

## ZONES INTERDITES ET LE PEUPLE TAMOUL

Les tamouls dans les zônes cotières du Nord et dans le département de Vavuniya, ont du faire face aux nombreux problèmes à cause de la proclamation des zônes interdites par le gouvernement Srilankais.

Toutes les zônes forêstières dans le département de Vavuniya sont interdites au public. Cette interdiction a été faite par le fonctionnaire chargé de la co-ordination Mr.Kingsly Jeyawardene, après qu'il y a eu un entretien avec un officier administratif du camp militaire, Thachchankulam à Vavuniya. La population de Vavuniya ont du sumonter bien des problème après cette déclaration.

De ce fait, la population ne peut faire de la cultivation dans les zônes declarées interdites de Vavuniya. Plus de 10 personnes ont été abattus dans la région de Vavuniya par les militaires après que l'interdiction à été déclarée le 08 avril, '86.

En même temps, plus de 1000 pêcheurs et leurs familles ont connu le même sort à cause des zônes interdites dans les régions de l'ouest. Le fait est qu'ils ne peuvent aller pêcher.

Ce-ci est un autre pas, que le gouvernement de Srilanka a fait pour détruire l'économie du peuple Tamoul.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UN JEUNE GARCON DE 9 ANS DANS UN CAMP MILITAIRE

Mme.Thangamany, une mère de famille a soumis une demande auprès d'un député pour Sammanthurai, pour qu'il intervienne pour que son fils soit relâché qui est agé de 9 ans, qui en ce moment detenu dans un camp militaire.

Le jeune garçon agé de 9 ans, Mr.Mathavan, a été arrêté par l'armée durant l'opération de recherche éffectuée de maison à maison le 25 mars 1986 et celle-ci dans le département d'Amparai à Puthunagar, Malwatte.

Aussi, elle déclara que sa maison a été envahié par l'armée dans le but d'arrêter son mari; puisqu'il n'était pas à la maison, le jeune garçon de 9 ans a été arrêter à sa place et a emmené.

Ce-ci est un autre exemple de la justice de la part du gouverenement de Mr.Jeyawardene.

## 3 CADAVRES RETROUVES A VAVUNIYA

Le 7 avril 1986, quatre personnes en allant vers le Temple à Paddikudiyiruppan, Nedunkerny, à Vavuniya, ont été emmenés par l'armée, soit disant pour une interrogation.

Trois cadavres de ces quatre personnes emmenées par l'armée ont été retrouvées le 8 avril 1986. Ces cadavres sont méconnaisables. En ce qui concerne la quatrième personne, une enquête est ouverte.

Il est à noter que le fonctionnaire de la co-ordination a annoncé les zônes interdites le 8 avril 1986 où a lieu le même jour cette tuerie.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE PARTI GOUVERNEMENTAL A PERDU DANS UNE ELECTION PARTIELLE

Le parti gouvernemental, le Parti National Unifié, a perdu dans une éléction partielle à Akmemane. Le candidat du partie national unifié a été battu par un candidat du SLFP;

Cette élection partielle a eu lieu le 17 avril 1986.

Le parti de Mme.Bandaranayake a remporté 2601 voix dans cette élection partielle. 88 pourcent des votants ont disapprouvé le parti national unifié dans cette élection partielle.

| | | |
|---|---|---|
| Mr.Richard Pathirane | ( SLFP ) | 25 029 |
| Mr.D.G.Albert Silva | ( UNP ) | 22 428 |

Il est a noter que Mme.Bandaranayake a participé au vôte le premier fois après le rétablissement de ses droits civiques.

---

## LES REFUGIES TAMOULS DANS LA REGION DE L'EST POUR SE NOURRIR ILS MANGENT DES FEUILLES

Plus de 3000 familles dans les régions de Muthur et Seruvila sont devenues des réfugiées à cause des attaques contre les Tamouls dans ces régions par l'armée et de la police et les bandits singhalais. Ces derniers sont armés volontairement à la demande du gouvernement Srilankais.

## UN BARRAGE A KANTHALAI ENDOMMAGE

A cause de endommagement d'un barrage à Kanthalai, dans le district de Trincomalee, 10 000 personnes ont deménagé. Il est a croire que plus de 100 personnes sont mortes. Après cet endommagement, il y a de l'eau dans la ville de Kanthalai d'un hauteur de 2 m. Il y a eu lieu le 19 avril '86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DEVELOPPEMENT ET AIDES ONT ETE SUSPENDUES DANS LE DEPARTEMENT DE VAVUNIYA

Le gouvernement Srilankais a pris un pas décisif d'arrêter toutes aides accordées aux personnes nécessiteuses à Vavuniya.

En même temps, toutes les aides au développement ont été arrêtées dans la région de Vavuniya. Dans l'aide pour développement a été mise 400 million de roupees, accordée par le fond monetaire International en 1984, dans le plan quinquennal. L'ordre d'arrêter cette aide provient du Ministère de Développement. Le gouvernement met en exécution l'arrêt de l'aide le 11.04.1984 avec l'intention de handicaper le developpement dans les régions Tamoules. L'arrêt de l'aide engend l'apauvrisement de territoire tamoul, notament en Vavuniya.

## DEUX PERSONNES DISPARUES PENDANT LE TRAJET AU TRAVAIL DANS LES CHAMPS

Il a été rapporté que dans le département de Vavuniya le comitée de la population a constaté la disparition de deux personnes pendant le trajet au travail dans les champs a Omanthai dans le département de Vavuniya.

Celles-ci sont:

1) Mr.Sivayogeswararajah ( 22 ans )
2) Mr.Sellathamby Bavananthathas ( 23 ans )

Dans les rizières les traces de souliers et des sangs ont été retrouvées. Il est à croire que deux personnes ont été abattues par l'armée. Cet incident a eu lieu le 11 avril '86, un vendredi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 PRETRES BOUDHISTES ONT ETE EMMENES ET PUIS RELACHES

7 prêtres Boudhistes ont été arrêtés, pendant qu'il fassent une grève de faim devant une statue boudhiste de Bambalapity à Colombo, dans la matinée du 10, le jeudi à 03 H 25 du matin.

Ils ont fait la grève de faim pour protester contre la silence du gouvernement Srilankais, à l'égard du personnel hopitalier qui faissaient la grève. Le gouvernement ne faisait rien pour arrêter cette grève de faim.

Pour les arrêter il y avait 150 personnes en civil et deux camions presents sur le lieu de grève.

La grève de faim a commencé dès le mois d'avril 1986, solidaire avec la grève du personnel soignant.

Les prêtres ont été transportés dans des vehicules separées, puis relâchés dans différents endroits. Il est à croire que c'était l'oeuvre des forces de la sécurité.

POUR TOUTES LES CORRESPONDECES:

L'EDITEUR,

TAMOUL MURASU,

CONSEIL DE LA LIBERATION D'EELAM,

10, RUE DES MARTYRS,

75009 , PARIS, FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 56 ECOLES FERMEES A TRINCOMALEE

56 écoles ont été fermées dans le département de Trincomalee à cause des attrocités exercées par les forces armées et des gardes de sécurité.

Certaines écoles ont été incendiées par les forces armées avec l'intention d'amputer l'éducation répandue parmi les tamouls et en plus de barrer la route aux réfugiés tamouls qui trouvent l'abri dans les écoles.

La plus part des écoles et notamment 56 d'entre elles ont du fermé leurs portes à cause de manquement de transport d'enfants. Les écoles à Muthur, Seruvila, Pankulam, Morewewa, Thiriyai, Thennimaravadi, Kuchuveli ont du fermé leurs portes.

## 6 CADAVRES BRULES DANS UN CAMP MILITAIRE A BATTICOLOA

6 personnes ont été tuées après avoir été torturées dans un camp militaire de Kallady - Batticoloa le 5 avril 1986. Ces 6 personnes ont fait objet de l'arrêstation et puis emmenées par l'armée durant une descente à Paduvankarai - Karaveddy dans la région de Batticoloa.

Le rapport d'autopsie a été rédigé par le Dr.Sri Panchalingam le dimanche au camp de l'armée. Il a été mentionné que la mort a été provoquée par les blessures des balles. Les cadavres retrouvés sont revêtus des chemises et des sarongs. Deux des cadavres ont été identifiés comme suits:

1) Mr.Thevarajah ( 28 ans ) de Mahilavedduvan
2) Mr.Soundrarajah ( 33 ans ) - un leader du temple de Munchakaddy Sithivinayagar

Les six cadavres ont été brûlés dans le camp militaire le 6 avril 1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIE PAR CONSEIL DE LA LIBERATION D'EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
வழங்கும்



5வது
தடவையாக

தியேட்டர் ரமேனலாவில்
1.6.1986

# சங்கே முழங்கு

புரட்சிகர கலாச்சார நிகழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு : ஈழ விடுதலைப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org